தற்காலத்தில் வழங்கும் மேளகர்த்தாக்கள்.

லக்கம்.	கர்த்தாவின் பெயர்.	லக்கம்.	கர்த்தாவின் பெயர்.
1	ஹநுமத்தோடி.	13	தீரசங்கராபரணம்.
2	தேனுக.	14	காங்கேயபூஷணி.
3	வகுளாபரணம்.	15	சலநாட.
4	மாயாமாளவகௌள.	16	ஜலவராளி.
5	சக்ரவாகம்.	17	பாவனி.
6	ஸூர்யகாந்தம்.	18	பவப்ரியா.
7	நடபைரவி.	19	சுபபந்துவராளி.
8	கீரவாணி.	20	காமவர்தனி.
9	கரஹரப்ரியா.	21	ராமப்ரியா.
10	கௌரீமனோஹரி.	22	ஷண்முகப்ரியா.
11	ஸ'வாங்கி.	23	லதாங்கி.
12	ஹரிகாம்போதி.	24	மேசகல்யாணி.

தற்காலத்தில் வழங்கும் ஜன்யராகங்கள்.

லக்கம்.	ஜன்யராகங்கள்.	லக்கம்.	ஜன்யராகங்கள்
	8. ஹநுமத்தோடி.	19	பாஜ்.
1	புன்னாகவராளி.	20	வஸிந்துராமக்ரியா.
2	தோடி.		16. சக்ரவாகம்.
3	ரேகுப்தி.	21	வேகவாஹினி
4	அஸாவேரி	22	மலயமாருதம.
5	தன்யாஸி.	23	கலாவதி.
	10 நாடகப்ரியா		17. ஸூர்யகாந்தம்.
6	ஸிந்துபைரவி.	24	பைரவம்.
	13. காயகப்ரியா.	25	லலித.
7	கலசட.	26	ச்யாமகன்னட.
	15. மாயாமாளவகௌள.	27	ஸௌராஷ்ட்ரம்.
8	மேகரஞ்சி.	28	வஸந்த.
9	பௌளி.	29	ஆஹிரி.
10	மேசபௌளி.		20. நடபைரவி.
11	பூபாளம்.	30	கண்டாரவம்.
12	நாதநாமக்ரிய.	31	ஸாரமதி.
13	ஸாவேரி.	32	பூர்ணஷட்ஜம்.
14	மலஹரி.	33	தேவக்ரியா.
15	கௌளிபந்து.	34	முகாரி
16	கௌரி.	35	உதயரவிசந்த்ரிகா.
17	கௌள.	36	பைரவி.
18	பிந்துமாலினி.	37	ஆனந்தபைரவி.

தற்காலத்தில் வழங்கும் ஜன்யராகங்கள்.

லக்கம்.	ஜன்யராகங்கள்.
38	மாஞ்சி.
39	ஆபேரி.
39*a*	ஸுதாதரங்கிணி.
40	ஹிந்தோளம்.
	22. கரஹரப்ரிய.
41	ஹுஸேனி.
42	மஞ்சரி.
43	காபி.
44	ஸ்ரீரஞ்சனி.
45	ஆபோகி.
46	நாயகி.
47	தேவமனோஹரி.
48	ஸாளகபைரவி.
49	சுத்தபங்காள.
50	ஸ்ரீராகம்.
51	நவரத்னவிலாஸம்.
52	மணிரங்கு.
53	மத்யமாவதி.
54	மாதவமனோஹரி.
55	ரீதிகௌள.
56	பலமஞ்சரி.
	26. சாருகேசி.
57	தரங்கிணி.
	27. ஸரஸாங்கி.
58	கமலாமனோஹரி.
	28. ஹரிகாம்போதி.
59	ஜிஞ்ஜோடி.
60	மாளவி.
61	ஸஹானா.
62	உமாபரணம்.
63	காம்போதி.
64	தேசாக்ஷி.
65	ஈசமனோஹரி.
66	கன்னடகௌள.
67	ப்ரதாபகர்ட.
68	கோகிலத்வனி
69	ஸரஸ்வதிமனோஹரி.
70	நாடகுரஞ்சி.
71	மோஹனம்.
72	த்விஜாவந்தி.
73	சாயாதரங்கிணி.
74	யதுகுலகாம்போதி.
75	பலஹம்ஸ.

லக்கம்.	ஜன்யராகங்கள்.
76	நாராயணி.
77	ச்யாம.
78	நாராயணகௌள.
79	காபிநாராயணி.
80	ஸுருடி.
81	கேதாரகௌள.
82	ப்ரதாபவராளி.
82*a*	ஆந்தாளி.
83	ஸ்வரகலாநிதி.
84	நாகஸ்வராவளி.
85	ஸ்வரஸகன்னட.
86	ஸிந்துகன்னட.
87	கமாஸ்.
88	குந்தலவராளி.
	29. தீரசங்கராபரணம்.
89	ஸுரோஜ்.
90	கானடா.
91	குரஞ்சி.
92	சங்கராபரணம்.
93	கருடத்வனி.
94	பங்காள.
95	நீலாம்பரி.
96	பூர்ணசந்த்ரிகா.
97	ஜனரஞ்சனி.
98	பிலஹரி.
99	ஹம்ஸத்வனி.
100	தேவகாந்தாரி.
101	தர்பார்.
102	ஆரபி.
103	சுத்தஸாவேரி.
104	அடாணா.
105	பேகட.
106	கன்னட.
107	பேஹாக்.
108	கேதாரம்.
	34. வாகதீச்வரி.
109	சாயாநாட.
	36. சலநாட.
110	நாட.
111	ச்ருதிரஞ்சனி.
112	கத்தநாட.
	39. ஜாலவராளி.
113	வராளி.

தற்காலத்தில் வழங்கும் ஜன்யராகங்கள்.

லக்கம்.	ஜன்யராகங்கள்.	லக்கம்.	ஜன்யராகங்கள்.
	41. பாவனி.	122	கமனக்ரியா.
114	சக்ரஜ்யோதி		60. நீதிமதி.
115	விஜயஸ்ரீ	123	கைகவசி.
	45. சுபபந்துவராளி.		64. வாசஸ்பதி.
116	பந்துவராளி.	124	பூஷாவளி.
	51. காமவர்தனி.	125	ப்ருந்தாவனஸாரங்க.
117	ராமக்ரியா.		65. மேசகல்யாணி.
118	கமகப்ரியா.	126	கல்யாணி.
119	மந்தாரி.	127	ஸாரங்க.
120	கௌரீபந்து.	128	யமுனாகல்யாணி.
	53. கமனப்ரியா.	129	ஹமீரகல்யாணி.
121	பூர்வகல்யாணி.		

தற்காலத்தில் வழங்கும் இந்துஸ்தானி ராகங்கள்.

லக்கம்.	ராகங்கள்.	லக்கம்.	ராகங்கள்.
1	ஸைந்தவ.	24	மேகநாத.
2	தனுச்ரீ.	25	தோடி
3	மேகமல்ஹார்.	26	சாயாதோடி.
4	நீலாம்பரி.	27	மார்க்கதோடி.
5	மாளவஸ்ரீ.	28	கண்டா.
6	ரக்தஹம்ஸ.	29	வராடிகா.
7	கௌரீ.	30	சுத்தவராடி.
8	மலஹரி.	31	தோடிவராடி.
9	பஞ்சம.	32	ராகவராடி.
10	வஸந்த.	33	புன்னாகவராடி.
11	தேசாக்ய.	34	ப்ரதாபவராடி.
12	தேசகாரீ.	35	சோகவராடி.
13	முகாரீ.	36	கல்யாணவராடி.
14	பைரவி.	37	கம்பாவதி.
15	பூபாலீ.	38	ஆபிரீ.
16	ப்ரஸப.	39	கல்யாண்.
17	கொல்லஹாஸ.	40	ராமகரீ.
18	பைரவ.	41	ஸாரங்க்.
19	வஸந்தபைரவ.	42	மாளவ.
20	மத்யமாதி.	43	குணகரீ.
21	பங்காலீ.	44	ககுப்.
22	நாராயணீபிபாஸ்.	45	சங்கராபரண.
23	கானடா.	46	பலஹம்ஸ.

தற்காலத்தில் வழங்கும் ஹிந்துஸ்தானிராகங்கள்.

லக்கம்.	ராகங்கள்.	லக்கம்.	ராகங்கள்.
47	வேலாவலீ.	89	ஸாதகாமத்ரியா.
48	கேதாரீ.	90	குடரி.
49	காம்போதி.	91	கௌட்.
50	கோபிகாம்போதி.	92	தேவகிரி.
51	லலித.	93	தேவகாந்தாரி.
52	பகுலா.	94	த்ரிவணீ.
53	கூர்ஜரீ.	95	குரங்க.
54	கௌமாரீ.	96	ஸௌதாமினீ.
55	ரேவா.	97	ஜைஜயந்தி.
56	கௌள.	98	ஹம்ஸ.
57	கேதாரகௌள	99	கோகில.
58	ஸாரங்ககௌள.	100	ஜயஸ்ரீ.
59	நாராயணகௌள.	101	ஸுராலய.
60	மாளவகௌள	102	அர்ஜுன.
61	தேசீ.	103	டோராவத்.
62	ஹிந்தோள.	104	கங்கண.
63	மார்கஹிந்தோள	105	ரத்னவலி.
64	டக்க.	106	கல்பதரு.
65	நாட.	107	ஸௌரடி.
66	நடநாராயண.	108	மாரு.
67	ஸாளங்கநாட.	109	பஹாரீ.
68	சாயாநாட.	110	குமுத
69	காமோதநாட.	111	சக்ரதர.
70	ஆபீரீநாட.	112	ஸிம்ஹரவ.
71	கல்யாணநாட.	113	மஞ்சுகோஷா.
72	கேதாரநாட.	114	சிவவல்லப.
73	வைராடீநாட.	115	மனோஹர
74	கின்னரநாட.	116	ஆனந்தபைரவி.
75	ஹேமநாட.	117	ஸிந்துபைரவி.
76	க்ஷேமநாட.	118	சங்கராநந்த.
77	அஸாவரீ.	119	மாளவி.
78	ஸாவேரீ.	120	ராஜதானி.
79	மேர்ஹனஸாவேரீ.	121	சர்வரி.
80	ஸாலங்க.	122	மியாசமல்ஹார்.
81	ஸ்ரீராக.	123	தடியாமல்ஹார்.
82	பஹாடி.	124	பாகலமல்ஹார்.
83	பிஹாக்.	125	ஸௌராடமல்ஹார்.
84	பூர்வீ.	126	கௌடமல்ஹார்.
85	பூர்விஸாரங்க்.	127	ராமதாஸிமல்ஹார்.
86	பூர்விதனுஸ்ரீ.	128	யமுன்கல்யான்.
87	ஸாமந்த.	129	ஹமீர்கல்யான்.
88	மங்களகௌசிக.	130	பூர்யாகல்யான்.

தற்காலத்தில் வழங்கும் ஹிந்துஸ்தானிராகங்கள்.

லக்கம்.	ராகங்கள்.	லக்கம்.	ராகங்கள்.
131	சஞ்சிகல்யான்.	170	ரூப.
132	ஜயதகல்யான்.	171	லங்காதஹனஸாரங்க்.
133	மோஹன்கல்யான்.	172	ஜலதாகேதார.
134	பூப்.	173	மலோவாகேதார.
135	ஹேம்கேம்.	174	ஸௌராஷ்ட்ர.
136	மியாஸிஸ்ரீ.	175	டக்.
137	லலதஸ்ரீ.	176	கட்.
138	கலாஸ்ரீ.	177	ஜிவனபுரீ.
139	ஜயதஸ்ரீ.	178	ஜிலப.
140	ஹிஜேஜ்.	179	காந்தார.
141	காரா.	180	ராமஸாக.
142	ஜிஞ்ஜோடி.	180*a*	லச்சாஸாக.
143	திலங்க்.	181	பலஸாக.
144	பருவா.	182	சந்த்ரகம்ஸ.
145	ஜங்கலா.	183	பரஜ்.
146	காபி.	184	மூல்தானி.
147	பிலூ.	185	லலதாகௌரீ.
148	ஸங்க்ரா.	186	மாரவா.
149	பிலாவல்.	187	பீமபலாஸீ.
150	யமனீபிலாவல்.	188	ஆரபீ.
151	சகலாபிலாவல்.	189	கலமஞ்சரீ.
152	கௌசிக.	190	ஸோஹனீ.
153	கானடா.	191	குணகலீ.
154	அடாணா.	192	ப்யாஹாகடா.
155	சஹாணா.	193	காலங்கடா.
156	நாயகிகானடா.	194	ககுப்பிலாவல்.
157	காராகானடா.	195	அலேயாபிலாவல்.
158	ஹுஸேனீகானடா.	196	விந்தபீர.
159	பாகேஸரீகானடா.	197	சுத்தகல்யாண.
160	மியாசாகானடா.	198	கௌடஸாரங்க.
161	ஸுஹா.	199	பைரவிதோடி.
162	ஸுகராயி.	200	தவலாஸ்ரீ.
163	லக்ஷ்மீதோடி.	201	பிபாஸிதோடி.
164	லாசாரிதோடி.	202	ராமகாந்தார.
165	தேசிதோடி.	203	சாமகல்யாண.
166	பிலாஸகானீதோடி.	204	வஸந்தபஹார.
167	மியாசிதோடி.	205	கானடயாசாபஹார.
168	மியாசி அஸாவரீ.	206	பாகேஸ்ரீபஹார.
169	பிருந்தாவனீஸாரங்க்.	207	பைரவபஹார.
		208	மால்கம்ஸ.

ஸம்பூர்ணம், ஷாடவம், ஔடவம் என்ற இம்மூன்றும் முறையே சுத்தஸம்பூர்ணம், வக்ரஸம்பூர்ணம், சுத்தஷாடவம்,

வக்ரஷாடவம், சுத்தஔடவம், வக்ரஔடவம் என்ற ஆறுவகை யாகும். ஆரோஹணம் அவரோஹணம் என்ற க்ரமத்தால் முப்பத்தாறாகும்.

வகை.	ஆரோஹண.	அவரோஹண.	மொத்தம்.
1	சுத்த ஸம்பூர்ண.	சுத்தஸம்பூர்ணம் ...	1
2	,,	வக்ரஸம்பூர்ணங்கள் ..	38
3	,,	சுத்தஷாடவங்கள் ...	6
4	,,	வக்ரஷாடவங்கள் ..	144
5	,,	சுத்த ஔடவங்கள் ...	15
6	,,	வக்ர ஔடவங்கள் ...	210
7	வக்ரஸம்பூர்ண.	சுத்தஸம்பூர்ணங்கள் ..	38
8	,,	வக்ரஸம்பூர்ணங்கள் ...	1,444
9	,,	சுத்தஷாடவங்கள் ...	228
10	,,	வக்ரஷாடவங்கள் ..	5,472
11	,,	சுத்த ஔடவங்கள் ..	570
12	,,	வக்ர ஔடவங்கள் ...	7,980
13	சுத்தஷாடவ.	சுத்தஸம்பூர்ணங்கள் ...	6
14	,,	வக்ரஸம்பூர்ணங்கள் ...	228
15	,,	சுத்தஷாடவங்கள் ..	36
16	,,	வக்ரஷாடவங்கள் ...	864
17	,,	சுத்த ஔடவங்கள் ...	90
18	,,	வக்ர ஔடவங்கள் ..	1,260
19	வக்ரஷாடவ.	சுத்தஸம்பூர்ணங்கள் ...	144
20	,,	வக்ரஸம்பூர்ணங்கள் ...	5,472
21	,,	சுத்தஷாடவங்கள் ...	864
22	,,	வக்ரஷாடவங்கள் ...	20,736
23	,,	சுத்த ஔடவங்கள் .	2,160
24	,,	வக்ர ஔடவங்கள் ..	30,240
25	சுத்த ஔடவ.	சுத்த ஸம்பூர்ணங்கள் ..	15
26	,,	வக்ர ஸம்பூர்ணங்கள் ...	570
27	,,	சுத்த ஷாடவங்கள் ...	90
28	,,	வக்ரஷாடவங்கள் ...	2,160
29	,,	சுத்த ஔடவங்கள் ...	225
30	,,	வக்ர ஔடவங்கள் ...	3,150
31	வக்ர ஔடவ.	சுத்தஸம்பூர்ணங்கள் ...	210
32	,,	வக்ரஸம்பூர்ணங்கள் .	7,980
33	,,	சுத்தஷாடவங்கள் ...	1,260
34	,,	வக்ரஷாடவங்கள் ...	30,240
35	,,	சுத்த ஔடவங்கள் ...	3,150
36	,,	வக்ர ஔடவங்கள் ...	44,100
		ஆகமொத்தம்...	171,396

இவைகளில் ஸம்பூர்ணங்கள் 89 × 789ம், 2,215,512 தாமும், ஷாடவங்கள் 150 × 600ம், 3,810,000 தாமும், ஔடுவங்கள் 225 × 225ம், 1,174,500 தாமும் வருகின்றன. அதாவது, ராகப்ரஸ்தாரத்தில் இதுவரையிலேற்பட்ட ராகங்களின் மொத்தம் 7,200,012.

சங்கராபரணம், கண்டாரவம், ஆஹம்ஸம், தீபகம், ரீதி, பூர்ணுடிகா, லாடீ, பல்லவீ என்றவை ராகாங்க ராகங்கள். காம்பீரீ, வெளஹாடீ, கசிகோத்பலீ, கோல்லீ, நாதாந்தரீ, நீலோத்பலீ, சாயாதரங்கிணீ, காந்தாரகதிகா, ஆரஞ்சா என்ற பதினொன்றும் பாஷாங்க ராகங்கள். பாவக்ரீ, ஸ்வபாவக்ரீ, சிவக்ரீ, மருகக்ரீ, த்ரிணேத்ரக்ரீ, குமுதக்ரீ, தனுக்ரீ, ஓஜக்ரீ, இந்த்ரக்ரீ, நாககிருதி, தன்யகிருதி, விபாயக்ரீ என்ற பன்னிரண்டும் க்ரியாங்க ராகங்கள். பூர்ணுடம், தேவாலம், குநஞ்சிகா என்ற மூன்றும் உபாங்க ராகங்கள். இந்த முப்பத்திநான்கு ராகங்களும் பூர்வகாலத்தில் ப்ரஸித்தமாயிருந்தவை. [ஸங்கிதரத்னாகரத்தைச்செய்த சார்ங்கதேவருடைய காலத்தில் ப்ரஸித்தமான ராகங்களில் சில: மத்யமாதி, மாளவஸ்ரீ, தோடீ, வங்காள, பைரவம், வராடீ, குர்ஜரீ, கெளட, கோலாஹல, ஹிந்தோள, வஸந்த, தன்யாஸீ, ரேகுப்த, தேசி, காந்தார, பஞ்சம, தேசாக்ய இவை ராகாங்க ராகங்கள். த்ரவணு, டெளம்பகிருதி, ககுபம், ரகந்தி, ஆஸாவரி, போகவர்த்தனீ, வேளாவளீ, ப்ரதமமஞ்சரீ, பாங்காளீ, ஆடீகாமோதீ, வேகரஞ்சி, நாதத்வனி, ஸெளவீரம், ஸெளவீரீ, சுத்தவராடீ, பிஞ்சரீ, கட்பா, கர்ணுடபங்காள இவை பாஷாங்க ராகங்கள். ராமகிருதி, கெளடகிருதி, தேவகிருதி இவை க்ரியாங்க ராகங்கள். கௌந்தளீ, த்ராவிடீ, ஸைந்தவீ, அபஸ்தானவராடீ, ஹதஸ்வரவராடீ, ப்ரதாபவராடீ இவை வராடீயின் உபாங்கங்கள். சாயாதோடீ, துருஷ்கதோடீ இவை தோடீயின் உபாங்கங்கள். மஹாராஷ்ட்ர குர்ஜரீ, ஸெளராஷ்டரகுர்ஜரீ, தக்ஷிணகுர்ஜரீ, த்ராவிடகுர்ஜரீ இவை குர்ஜரீயின் உபாங்கங்கள். புச்சி, கம்பாயிதி, சாயாவேளாவளீ, ப்ரதாபவேளாவளீ இவை வேளாவளீயின் உபாங்கங்கள். பைரவீ, ஸிம்ஹளீகாமோதா, சாயாநாட, கோலாஹல, ராமகிருதி, சேவாடீ, வல்லாதா, சுத்தபஞ்சம, ஆந்தாளீ, மல்ஹாரீ, மல்ஹார, கர்ணுடகெளட, தேசவால, துருஷ்ககெளட, த்ராவிடகெளட இவை கெளடத்தின் உபாங்கராகங்கள்.]

[பரமசிவனுடைய ஸத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் என்ற ஐந்து முகங்களிலிருந்தும் ரி. க. ம. த. நி. என்ற ஸ்வரங்கள் பிறந்தனவென்றும், பிறகு பார்வதி தேவி ஷட்ஜத்தையும் பஞ்சமத்தையும் கொடுத்து அவைகளை ஸம்

பூர்ணமாய்ச்செய்ததாகவும் சொல்லப்படுகிறது. மேலும் மேற்சொன்ன ஐந்து முகங்களிலிருந்து ஸ்ரீராகம், வஸந்தா, பைரவம், பஞ்சமம், மேகம், பார்வதியின் முகத்திலிருந்து நடநாராயண என்ற புருஷராகங்கள் முறையே உண்டாயினவென்றும், அவற்றை சிசிர, வஸந்த, கிரீஷ்ம, சரத், வர்ஷ, ஹேமந்தருதுக்களில் (பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி மாஸங்களில்) பாடவேண்டுமென்றும் ஸோமேச்வரர் அபிப்ராயப்படுகிருர்.]

சுத்தராகங்கள்.—தேவக்ரியை, கல்யாணீ, காம்போஜீ, ஸாஹூளீ, பாண்டீ, குண்டக்ரியா, வராளீ, முகாரீ முதலியவை.

சாயாலகராகங்கள்.—தேசி, குரஞ்ஜீ, பல்லாதீ, சங்கராபரணம், பிலஹரீ, பௌளீ, ராமக்ரியை, ஆஹரீ முதலியவை.

ஸங்கீர்ணகராகங்கள்.—மேகரஞ்சீ, மலஹரீ, மந்தாரீ, கூர்ஜரீ, கண்டாரவம், லலிதா, கௌள, ஸாவேரீ முதலியவை.

மிச்ரராகங்கள் :—

ஆந்தாளீ.—கானடகஆந்தாளீ, தேசியஆந்தாளீ, நவரஸஆந்தாளீ.

ஹிந்தோளம்.—நாகஹிந்தோளம், மார்கஹிந்தோளம்.

கண்டாரவம.—இந்துகண்டாரவம், சாபகண்டாரவம்.

கல்யாணீ.—ஹமீர்கல்யாணீ, ச்யாமகல்யாணீ, பூஷாகல்யாணீ, பூபகல்யாணீ, பூர்வகல்யாணீ, மேசகல்யாணீ, பமுனகல்யாணீ.

களாநிதி.—சுத்தகளாநிதி, ஸ்வரகளாநிதி, நவரஸகளாநிதி, பூர்ணகளாநிதி, ரஸகளாநிதி.

கன்னட.—ஹிந்தோளகன்னட, கந்தர்வகன்னட, ஸாமகன்னட, விந்துகன்னட, சுத்தகன்னட, நவரஸகன்னட, பூர்வகன்னட, பிருந்தாவனகன்னட, மாருவகன்னட, மேசகன்னட, வஸந்தகன்னட. •

காந்தாரி.—ஹம்ஸகாந்தாரி, கர்னடகதேவகாந்தாரி, கௌரிகாந்தாரி, சுத்தகாந்தாரி, கௌடகாந்தாரி, திவ்யகாந்தாரி, தேவகாந்தாரி, நவரஸகாந்தாரி, நாககாந்தாரி, பின்னகாந்தாரி, புவனகாந்தாரி, பூர்ணகாந்தாரி, மேசகாந்தாரி, ருத்ரகாந்தாரி, லலிதகாந்தாரி.

காபி.—ஹிந்தோளகாபி, ஸாரங்ககாபி, ஸிம்ஹளகாபி.

காம்போஜீ.—ஹம்ஸகாம்போஜீ, ஹரிகாம்போஜீ, குந்தல காம்போஜீ, கும்மகாம்போஜீ, சஞ்சகாம்போஜீ, ஸாமந்தகாம் போஜீ, மேசகாம்போஜீ, யதுகுலகாம்போஜீ.

குரஞ்ஜீ.—கன்னடகுரஞ்ஜீ, சாமகுரஞ்ஜீ, ஸிந்துநாடகுர ஞ்ஜீ, தேசியநாடகுரஞ்ஜீ, நாடகுரஞ்ஜீ.

கௌரி.—சாயாகௌரி, ஹிந்துகௌரி, தேசியகௌரி, மங் களகௌரி, மாருவகௌரி, லலிதகௌரி.

கௌள.—ஈசகௌள, கன்னடகௌள, கேதாரகௌள, சங் கிரிகாகௌள, சாயாகௌள, ஸைந்தவகௌள, தேசியகௌள, நாராயணகௌள, பானுகௌள, பூர்வகௌள, மாயாமாளவ கௌள, மாருவகௌள, ரீதிகௌள.

ஸாரங்க.—ஹிந்தோளஸாரங்க, ஸாமலஸாரங்க, சுத்தஸார ங்க, ப்ரதாபஸாரங்க, ப்ரமாஸாரங்க, பிருந்தாவனஸாரங்க, மாரு வஸாரங்க, விஜயஸாரங்க.

ஸாவேரீ.—அஸாவேரீ, ஹிந்தோளஸாவேரீ, கல்லோலஸா வேரீ, களாஸாவேரீ, ஜயஸாவேரீ, ஸிம்ஹளஸாவேரீ, சுத்தஸா வேரீ, நீரஸாவேரீ, போகஸாவேரீ, மேகஸாவேரீ.

ஸாமாட.—கர்நாடகஸாமாட, ஜஞ்சுராட, தேசியஸாமாட.

ஸௌராஷ்ட்ரம்.— கன்னடஸௌராஷ்ட்ரம்.

தர்பார்.—ஹிந்தோளதர்பார், கன்னடதர்பார்.

தன்யாஸி.—இந்துதன்யாஸி, குந்தலதன்யாஸி, சுத்ததன் யாஸி, பானுதன்யாஸி, போகதன்யாஸி, மாருவதன்யாசி, மௌ ல்தாதன்யாஸி.

தேசாக்ஷி.—ஹிந்தோளதேசாக்ஷி, சைலதேசாக்ஷி, நாராய ணதேசாக்ஷி, பிருந்தாவனதேசாக்ஷி.

தோடி.—ஹனுமத்தோடி, புன்னாகதோடி, லலிததோடி.

நாட.—ஆஹரிநாட, இந்துஸாரங்கநாட, சம்பிரநாட, கேதா ரநாட, சலநாட, சாயாநாட, ஸாரங்கநாட, ஸாளகநாட, ஸிந்து நாட, சுத்தநாட, ப்ரதாபநாட.

நாயகி.—ஹிந்தோளநாயகி, கனநாயகி.

நாராயணி.—ஹம்ஸநாராயணி, ஹரிநாராயணி, கந்தர்வநா ராயணி, கமலநாராயணி, காபிநாராயணி, ஜயநாராயணி, ஸாம நாராயணி, சாயாநாராயணி, தேசியநாராயணி, நடநாராயணி, காமநாராயணி, ப்ரமநாராயணி, மாரநாராயணி, மாருவநாராய ணி, மேசநாராயணி, வஸந்தநாராயணி.

பங்காள.—கல்லோலபங்காள, கன்னடபங்காள, கௌரீபங்காள, ஸாளவிபங்காள, சுத்தபங்காள, தேசிகபங்காள, நவரஸபங்காள, மாருவபங்காள, மேசபங்காள.

பூபாளம்.—ஹம்ஸ பூபாளம், ககன பூபாளம், ஸோம பூபாளம், நாக பூபாளம், வஸந்த பூபாளம்.

பேகட.—தேச்யபேகட.

பைரவி.—ஆதிபைரவி, ஆனந்தபைரவி, ஸாளகபைரவி, விந்துபைரவி, ஸிம்ஹளபைரவி, ஜிங்லாபைரவி, சுத்தபைரவி, ஸௌராஷ்ட்ரபைரவி, ஸோமபைரவி, டபைரவி, பூர்வபைரவி, வஸந்தபைரவி.

பௌளி.—சாயாபௌளி, ஸாரங்கபௌளி, மேசபௌளி.

மல்ஹார.—கன்னடமல்ஹார, கௌடமல்ஹார, ஸாமந்தமல்ஹார, ஸௌராஷ்டிமல்ஹார, மேகமல்ஹார, மோஹனமல்ஹார, ரீதிமல்ஹார.

மாருவ.—கன்னடமாருவ, கௌரீமாருவ, சாயாமாருவ, ஸாரங்கமாருவ, விந்துமாருவ, சுத்தமாருவ, தேச்யமாருவ, லலிதமாருவ, வஸந்தமாருவ.

மாளவி.—ஹிந்தோளமாளவி, கௌளமாளவி, சாயாமாளவி, ஸிந்துமாளவி, ஸ்ரீமாளவி, சுத்தமாளவி, தேவமாளவி.

முகாரி.—சுத்தமுகாரி, தேச்யமுகாரி, தேவமுகாரி, பூர்வமுகாரி, வஸந்தமுகாரி.

ரேகுப்தி.—தேச்யரேகுப்தி.

லலித.—ஸாரங்கலலித, சுத்தலலித, பூர்ணலலித, மாருவலலித.

வஸந்த.—கலவஸந்த, ஹிந்தோளவஸந்த, கமலவஸந்த, கலிகவஸந்த, கல்யாணவஸந்த, கனகவஸந்த, கோபிகாவஸந்த, ஸிம்ஹளவஸந்த, ரக்தவஸந்த, புஷ்பவஸந்த, போகவஸந்த, ப்ரதாபவஸந்த, மாருவவஸந்த, ராகவஸந்த, விஜயவஸந்த, வீரவஸந்த.

வராளி.—குந்தலவராளி, கோகிலவராளி, ஸாமவராளி, ஜலவராளி, ஸிம்ஹளவராளி, சுத்தவராளி, சுபபந்துவராளி, ஸௌராஷ்ட்ரவராளி, சோகவராளி, நாகவராளி, பந்துவராளி, புன்னாகவராளி, போகவராளி, ப்ரதாபவராளி, மோஹனவராளி, வஸந்தவராளி.

புருஷராகம்.	ஸ்த்ரீராகம்.	புருஷராகம்.	ஸ்த்ரீராகம்.
ஸோமேச்வரமதம்.		ஹநுமன்மதம்.	
ஸ்ரீராகம் ...	மாலவீ த்ரிவணீ கௌரீ கேதாரீ மதுமாதவீ பாஹடிகா	பைரவ ...	மத்யமா பைரவீ பங்காலீ வராடிகா ஸைந்தவீ
வஸந்த ...	தேசீ தேவகிரீ வைராடீ தோடிகா லலிதா ஹிந்தோலீ	கௌசிக ...	தோடீ சம்பாவதீ கௌரீ குணக்ரீ ககுபா
பைரவ	பைரவீ குர்ஜரீ ரேவா குணகரீ பங்காலீ பஹுலீ	ஹிந்தோள .	வேலாவலீ ராமகரீ தேசாக்யா படமஞ்சரீ லலிதா
பஞ்சம ..	விபாஸ பூபாளீ கர்ணாடீ வடஹம்ஸிகா மாலஸ்ரீ படமஞ்சரீ	தீபக ..	கேதாரீ கானடீ தேசீ காமோதீ நாடிகா
மேக ...	மல்லாரீ ஸோரடீ ஸாவேரீ கௌசிகீ காந்தாரீ ஹரசிருங்கார	ஸ்ரீராக ...	வஸந்தீ மாலவீ மாலஸ்ரீ தனஸ்ரீ அஸாவரீ
நடநாராயண ...	காமோதீ கல்யாணீ ஆபேரீ நாடிகா ஸாரங்க நடஹம்பீர	மேக ...	மல்லாரீ தேசகாரீ பூபாலீ குர்ஜரீ டங்க

புருஷராகம்.	ஸ்த்ரீராகம்.	புருஷராகம்.	ஸ்த்ரீராகம்.
ராகார்ணவமதம்.		சார்ங்கதேவமதம்.	
	பங்காலீ		மதுமாத
	குணகரீ		பைரவீ
பைரவ .	மத்யமா	பைரவ .	பங்காலீ
	வஸந்தகா		வராரீ
	தனுஶ்ரீ		ஸைந்தவீ
	லலிதா		தோடீ
	குர்ஜரீ		கம்மாவதீ
பஞ்சம ..	தேசி	மாலகௌஶிக.	கௌடீ
	வராடீ		குணகலீ
	ராமக்ரியா		ககுப
	காந்தார		வேலாவலீ
	ஸாலக		ராமகலீ
நாட	கேதார	ஹிந்தோள	படமஞ்சரீ
	கர்ணாட		தேசாக
	நடநாராயண		லலிதா
	மேக		நடமல்லாரீ
	மல்லாரீ		கானடா
மல்லார ...	மாலகௌஶிக	தீபக	கேதார
	படமஞ்சரீ		தேசி
	அஸாவரீ		பஹாட
	ஹிந்தோள		வஸந்த
	தரிவணு		மாலவீ
கௌடமாலவ .	கௌரீ		மாலவஶ்ரீ
	தாரீ	ஶ்ரீராக ..	தனுஶ்ரீ
	பலஹம்ஸிகா		அஸாவரீ
	பூபாலீ		மல்லாரீ
	குடாயீ		தேசகாரீ
தேசாக்ய ...	காமோதீ	மேக	பூபாலீ
	நாடிகா		பஹாரீ
	வேலாவலீ		குர்ஜரீ

புருஷராகம்.	ஸ்த்ரீராகம்.	புருஷராகம்.	ஸ்த்ரீராகம்.
	இந்த்ரப்ரஸ்தமதம்.		
பைரவ ...	பைரவீ ராமகரீ தோடீ குர்ஜரீ	தீபக ...	தனஶ்ரீ மூலதானீ ஸம ஜயத்ஶ்ரீ பீமபலாஸீ
கௌஶிக ...	கம்மாவதீ பாகேச்வரீ ககுப பரஜ சோஹனீ	ஶ்ரீராக ...	மாலாவீ த்ரிவேணீ கௌரீ காடபுரீ பிடஞ்
ஹிந்தோள ...	வஸந்தீ பஞ்சமீ வேலாவலீ விசாரீ லலிதா	மேக ...	ஸோரட ஸாரங்க மல்லார் படஹம்ஸீ மதுமாதவீ

இதரமதம்.

புருஷராகம்.	ஸ்த்ரீராகம்.	அதிராகம்.	புத்ரராகம்.	அதி தேவதை.	குலம்.	வேதம்.	* ரஸம்.	குணம்.
பைரவி ...	தேவக்ரியா ... மேகரஞ்சி .. குரஞ்சி ...	கன்னட ...	காபி ... ரேகுப்தி ...	சிவன் ..	ப்ராஹ்மண	ஸாம ..	ரௌத்ர	ராஜஸ
பூபாளம் ...	பிலஹரி ... மலஹரி ... பாடி ...	தேசாக்ஷி ... தேவகாந்தாரி.	நீலாம்பரி ..	விஷ்ணு	ப்ராஹ்மண	ஸாம ..	சிருங்கார	ராஜஸ
ஸ்ரீராகம் ...	ஆந்தாளி .. பல்லாஜி .. ஜுஜாஹுளி .	தேசி ...	மாளவ ... ராமகிரி ..	ஸரஸ்வதி	க்ஷத்ரிய —	யஜுஸ் ...	பீபத்ஸ ...	தாமஸ
பலமஞ்சரி ...	தேசி ... முகாரி ... லலித ...	அஸாவேரி ..	ஸாரங்க .. மந்தாரி ... ஸௌராஷ்ட்ர கேதாரம்	லக்ஷ்மீ ...	க்ஷத்ரிய ...	யஜுஸ் ...	கருண ...	தாமஸ
வஸந்த ...	ராமக்ரியா ... வராளி .. கௌள ...	மோஹனம் ...	முகாரி, லலித, தோடி, தன்யாஸி, காராயணி, கௌரி ...	ஸூர்யன்	வைச்ய ...	ருக் ...	ஹாஸ்ய	ஸாத்விக
மாளவி ...	குண்டக்ரியா ... குர்ஜரி ... பௌளி ...	ஹிந்தோள ..	பந்துவராளி வராளி ... கௌள ..	நாரதர் ...	வைச்ய ...	ருக் ...	பயானக	ஸாத்விக
பங்காள ...	கல்யாணி ... ஆஹிரி ... ஸாவேரி ..	போளி ...	பூர்வி, ஸாவேரி, பேகட ... பௌளி ...	விநாயகர்	சூத்ர ...	அதர்வண ...	அத்புத ...	ராஜஸ
நாட ...	கண்டாரவம் ... காம்போஜி ... சங்கராபரணம்	வேளாவளி ...	மனோஹரி ... யமுனா ...	தும்புரு	சூத்ர. ...	அதர்வண ...	வீர ...	ராஜஸ

* எல்லா ராகங்களும் சாந்தரஸத்திற்கு ஒத்திருக்கும்.

ராகங்கள், கனம், நயம், தேச்யம் என மூவகை.

நாட, கௌள, ஆரபி, ஸ்ரீராகம், வராளி, கேதாரம், நாராயண கௌள, ரீதிகௌள, சாரங்கநாட, பௌளி இவை பத்தும் கனராகங்கள்.

பாஜ், கமாஸ், பேஹாக், ஹமீர்கல்யாணி, காபி, தர்பார், யமுனா, கானடா, ஜிஞ்ஜோடி முதலியவை தேச்யராகங்கள்.

மற்றவை நயராகங்களெனப்படும்.

ராகங்களின் காலம்.—விடியற்காலையில்: தேசாக்ஷி, தேவகாந்தாரி, பாண்டி, தன்யாஸி, மாருவ, தேவக்ரியா, மந்தாரீ, கௌரீ, பூபாளம்.

முன்பகலில்.—குரஞ்சி, ஸாஹானி, கண்டாரவம், ராமக்ரியா, பிலஹரி, மலஹரி, முகாரீ, யமுனா, ரேகுப்தி, பைரவம்.

மத்யாஹ்னத்தில்.—மேகரஞ்சி, ஸாரங்கா, பல்லாதி, மத்யமாவதி, தேசி, நீலாம்பரி, மங்களதேசிகா, ஸ்ரீராகம்.

பின்பகலில்.—மோஹனம், கல்யாணி, காபி, குர்ஜரி, சங்கராபரணம், பூர்வி, வஸந்த.

ஸாயங்காலத்தில்.—நாராயணி, ஹிந்தோளி, ஸௌராஷ்ட்ரம், தோடி, ராமகலீ, கௌரீ, பந்துவராளி, ஹுஸேனி, மாளவி.

முன்ராத்ரியில்.—லலிதா, வேளாவளி, காம்போஜீ. ஸாவேரி, பேகடா.

மத்யராத்ரியில்.—புன்னாகவராளி, நாட, குண்டக்ரியா, மனோஹரி, மங்களகைசிகா, கேதார, ஆஹரி, அஸாவேரி, பங்காள, பௌளி.

பின்ராத்ரியில்.—ஜோகினி, சித்ரவேளா, கர்னாட, ஸுராட, மஞ்சரி—இந்த வரிசையாய்ப் பாடவேண்டியது.

சப்தங்கள் மாது என்றும் அவைகளுக்கேற்படும் ஸ்வரங்கள் தாதுவென்றும் சொல்லப்படும். எவன் சப்தங்களையும் அதற்கேற்ற ஸ்வரங்களையும் அமைத்து ஒரு கீதத்தைச்செய்ய வல்லவனோ அவன் வாக்கேயகாரகன் எனப்படுவான். அவன் வ்யாகரணசாஸ்த்ரம், நிகண்டுகள், சந்தஸ்சாஸ்த்ரம், அலங்காரசாஸ்த்ரம், ரஸங்கள், பாவங்கள், ரீதிகள், ஸங்கீதசாஸ்த்ரம், ந்ருத்யம், கீதம், வாத்யம், நானாதேசபாஷைகள், லயம், தானம், கலை, ஸம்ப்ரதாயங்கள் முதலியவைகளில் நிபுணனாயிருக்கவேண்டியது. லக்ஷணங்கள் பொருந்திய சரீரத்தையும், மேன்மேலும் தோன்றும் புத்தியையும், எல்லோரையும் ஸந்தோஷப்படுத்தும்படியான பாட்டையும், தேசிராகங்களில் பாண்டித்யத்தையும், ஸபைகளில் சாதுர்யமாயும் ஸமயோசிதமாயும் பேசும் திறமையையும் உடைத்

தாயிருக்கவேண்டியது. ராகத்வேஷங்களற்றவனும், தயையுள்ளவனும், சுத்தமான வார்த்தையையுடையவனும், கீதங்களுக்குப் புதியவர்ணமெட்டுகளை அமைக்கக்கூடியவனும், பிறருடைய அபிப்ராயத்தை அறியக்கூடியவனும், ப்ரபந்தங்களைச் செய்யும் சாஸ்த்ரத்தில் நிபுணனும், வேகமாய்க் கீதங்களைச் செய்யக்கூடினவனும், அநேகவிதமான கீதங்களைப்பார்த்தவுடன் அவைகளைப்போல் செய்யக்கூடியவனும், மூன்றுஸ்தானங்களிலும் பதினைந்துவிதகமகங்களைப்ரயோகிக்கக்கூடியவனும், ராகாலாபம் ரூபகாலாபம் என்றவைகளில் நிபுணனும், மனதை ஒரே விஷயத்தில் நிறுத்தக்கூடியவனும் இருக்கவேண்டியது. மேற்சொன்ன லக்ஷணங்கள் பொருந்தியவன் **உத்தமன்** எனப்படுவான்.

சப்தங்களைச்செய்வதில் மந்தபுத்தியுள்ளவனும், அவைகளை ஸங்கீதத்திற்கு அமைப்பதில் அதிக புத்தியுள்ளவனுமிருப்பவனும், சப்தங்களையும் வர்ணமெட்டுகளையும் அமைப்பதில் திறமையுள்ளவனாயிருந்தும், ஏலா முதலிய ப்ரபந்தங்களில் பூர்ணஞானமில்லாதவனும் **மத்யமன்** எனப்படுவார்கள்.

மதுரமான சப்தங்களை அமைப்பதில் திறமையுடையவனாயிருந்தாலும் அவைகளை ஸங்கீதத்திற்கு இசைப்பதில் மந்தபுத்தியுள்ளவன் **அதமன்** எனப்படுவான்.

கதைகளை நிர்மாணம்செய்யக்கூடிய வஸ்துகவியானவன், ச்ரேஷ்டன். வர்ணனைமாத்ரம் செய்யக்கூடிய வர்ணகவி, மத்யமன். பிறர் செய்த வர்ணமெட்டில் சப்தங்களைச்செய்து அமைப்பவன் (குட்டிகாரன்), மிகவும் அதமனெனப்படுவான்.

மார்க்கம், தேசி என்ற ஸங்கீதவிபாகங்களில் நிபுணன் காந்தர்வன் எனப்படுவான். மார்க்கத்தை மாத்ரம் அறிந்தவன் ஸ்வராதியெனப்படுவான்.

உத்தமகாயன(பாடக)னுடைய லக்ஷணங்கள்.— லக்ஷணங்களோடுகூடிய சப்தம், சாரீரம், கீதங்களை ஆரம்பிப்பதிலும் முடிப்பதிலும் சாதுர்யம் (க்ரஹம், தாளம், லயம் பிசகாமல் பாடுந்திறமை); ராகம், ராகாங்கம், பாஷாங்கம், க்ரியாங்கம், உபாங்கம் என்பவைகளில் பாண்டித்யம்; ப்ரபந்தசாஸ்த்ரத்திலும் ஸங்கீதசாஸ்த்ரத்திலும் பூர்ணஞானம்; அநேகவித ஆலாபங்களின் தத்வத்தை அறிந்திருப்பது; மூன்று ஸ்தானங்களிலும் எல்லாக் கமகங்களிலும் ஆயாசமில்லாமல் ஸஞ்சரிக்கக்கூடிய சக்தி; தனக்கு ஸ்வாதீனமாயிருக்கும் சாரீரம்; தாளஞானம்; ஜாக்ரதை; ச்ரமத்தையடையாதிருப்பது; சுத்தம், சாயாலகம் என்ற ராகபேதங்களின் ஞானம்; காகு முதலிய ஸ்தாயங்களில் பழக்கம்; ஸ்தாயங்

களில் எல்லையில்லாமல் ஸஞ்சரிக்கக்கூடிய சக்தி; அடியில் சொல்லப்படும் தோஷங்களில்லாமை; எப்பொழுதும் ஸாதகம்செய்துகொண்டிருத்தல்; தடைப்படாமல் அதிவேகமாய் ஸஞ்சரிக்கக்கூடிய சக்தி; பிறர் செய்த கீதங்களைக் கேட்போர்மனமுருகும்படி பாடுந்திறமை; ச்ரேஷ்டமான வம்சபரம்பரையுள்ள குருக்களிடத்தில் ஸங்கீதத்தை அப்யஸித்தல் முதலியவை.

மேற்சொன்ன குணங்களில் சில இல்லாமற்போனாலும் தோஷங்களில்லாவிட்டால் மத்யமகாயனன் எனப்படுவான்.

காயனர்கள் ஐந்துவகை.

1. சிக்ஷாகாரன்.—பிறருக்குப்போதிக்கும் சக்தியைப்பூர்ணமாயுடையவன்.

2. அனுகாரன்.—பிறருடைய வழியை அனுஸரிப்பவன்.

3. ரஸிகன்.—ரஸத்தில் விசேஷ கவனத்தைச்செலுத்துகிறவன்.

4. ரஞ்சகன்.—கேட்போரை ஸந்தோஷப்படுத்துகிறவன்.

5. பாவுகன்.—கீதத்தை அளவுக்குமிஞ்சிப்பாடுகிறவன்.

ஒருவனாய்ப்பாடி நிர்வஹிக்கக்கூடியவன் ஏகல்லன். மற்றொருவனுடைய ஸஹாயத்துடன் பாடுகிறவன் யமளன். அநேகம் பெயர்களுடன் பாடுகிறவன் விருந்தகாயனன்.

மேற்சொன்ன லக்ஷணங்கள் ஸ்த்ரீகளுக்கும் ஒவ்வும்; அவர்களுக்கு காயனிகள் என்று பெயர்.

காயனதோஷங்கள். பல்லைக்கடித்துக்கொண்டு பாடுகிறவன் ஸந்தஷ்டன். ரஸபேதமாய் இரைகிறவன் உத்குஷ்டன். அடிக்கடி 'ஸூ' என்னும் சப்தத்தை உண்டாக்குகிறவன் ஸூத்காரீ. பயப்படுகிறவன் பீதன். அதிவேகமாய்ப்பாடுகிறவன் சங்கிதன். சப்தங்களிலும் சாரீரத்திலும் நடுக்கலுடன் பாடுகிறவன் கம்பிதன். வாயைப் பயங்கரமாய்த் திறந்துகொண்டுபாடுகிறவன் கராளி. ஸ்வரங்களை ஏற்பட்ட ச்ருதிக்கு அதிகமாகவாவது குறைவாகவாவது பாடுகிறவன் விகலன். காக்கையைப்போல் க்ரூரமான த்வனியையுடையவன் காகீ. தாளத்தைவிட்டுப்பாடுகிறவன் விதாளன். கழுத்தை மேலே தூக்கிக்கொண்டுபாடுகிறவன் கரபன். ஆட்டைப்போல் கழுத்தை வைத்துக்கொண்டு பாடுகிறவன் உத்வடன். பாடும்போது நரம்புகள்தடித்த நெற்றி, முகம், கழுத்துகளையுடையவன் ஜோம்பகன். சுரைக்குடுக்கையைப்போல் கழுத்தையுடையவன் தும்பகீ. கழுத்தைக் கோணலாய்த்திருப்பிக்கொண்டு பாடுகிறவன் வக்ரீ. பாடும்போது கைகளை அடிக்கடி நீட்டிக்கொண்டு பாடுகிறவன் ப்ரஸாரீ. பாடும்போது கண்களை மூடிக்கொள்ளுகிறவன் நிமீலகன். ரஸங்களுக்கு ஒவ்வாமல்

பாடுகிறவன் விரஸன். வர்ஜஸ்வரங்களைப் பிடித்துப்பாடுகிறவன் அபஸ்வரன். தழுதழுத்த த்வனியையும் வ்யக்தமாய்த்தெரியாத அக்ஷரங்களையுமுடையவன் அவ்யக்தன். மூன்று ஸ்தானங்களையும் எட்டமுடியாதவன் ஸ்தானப்ரஷ்டன். ஸ்தானங்களில் வ்யவஸ்தையில்லாமற்பாடுகிறவன் அவ்யவஸ்திதன். சுத்த ராகங்களையும் சாயாலகராகங்களையும் மற்றராகங்களையும் கலந்துபாடுகிறவன் மிச்ரகன். ஸ்தாயிகளில் *அஜாக்ரதையாய் ஸஞ்சரிப்பவன் நிர்முக்தன். மூக்கால் பாடுகிறவன் ஸானுநாஸிகன்.

[இக்கிக்கொண்டாவது, வாயை மறைத்துக்கொண்டாவது, வாயை விசாலமாகத் திறந்துகொண்டாவது, நாக்கை நீட்டிக்கொண்டாவது பாடக்கூடாது. பாடும்போது கைகளை அங்குமிங்கும் நீட்டுவதும், தன்னுடைய தேஹத்தைப்பார்த்துக்கொண்டே பிறரைப்பார்க்காமல் பாடுவதும், கைகளை உயரத்தூக்கிக்கொண்டாவது தலைக்குமேலே பார்த்துக்கொண்டாவது பாடுவதும் பிசகு. சிரிப்பு, பயம், பசி, நடுக்கல், கோபம், வேறு ஞாபகம், தாஹம இவைகளால் பிடிக்கப்படும்பொழுது பாடக்கூடாது. ஒரு கையால் தாளம்போடக்கூடாது. இருட்டில் ஒருபொழுதும் பாடக்கூடாது.—அத்புதராமாயணம். VII.]

[வீணை, புல்லாங்குழல் முதலிய வாத்யங்களின் ஸ்வரங்களுக்குப்பாட்டு ஒத்திருக்கவேண்டும். ஸ்வரம், ச்ருதி, சந்தஸ், பாதம், அக்ஷரம் இவைகள லக்ஷணப்படி குறையாமல நன்றாய்ச்சேர்ந்திருக்கவேண்டும். மார்பு, சிரஸ், கழுத்து என்ற மூன்று ஸ்தானங்களிலிருந்தும் விதிப்படி சப்தங்கள் உண்டாகவேண்டும். நடுக்கல் ஸந்தேஹம் முதலியவை இருக்கக்கூடாது. பதம், பதத்தின் அர்த்தம், பகுதி, விகுதி, ஸமாஸம், தாது, உபஸர்க்கம், ஸ்வரம், லிங்கம், வேற்றுமை முதலிய லக்ஷணங்கள் பொருந்திருக்கவேண்டும். மேல்ஸ்தாயியில் பாடும்போது அக்ஷரங்களும் பதங்களும் வ்யக்தமாயிருக்கவேண்டும். அதிக வேகமில்லாமலும் அதிக மெதுவாயிராமலும் உதாத்தம், அநுதாத்தம், ப்லுதம் முதலிய ஸ்வரங்கள் விதிப்படி கலந்துமிருக்கவேண்டும். ஆலாபம், நிர்வாபம் முதலிய ஸ்தானங்களில் ஸரியாக ஆரம்பித்து முடிக்கவேண்டும். மிருதுவானபதம், அக்ஷரம், ஸ்வரம் முதலியவைகளால் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். பதங்களும் அக்ஷரங்களும் ஸ்வரத்திற்கும் பாவத்திற்கும் ஒத்திருக்கவேண்டும். இவை முறையே, ரக்தம், பூர்ணம், அலங்க்ருதம், ப்ரஸன்னம், வ்யக்தம், விக்ருஷ்டம், ச்லக்ஷணம், ஸமம், ஸுகுமாரம், மதுரம் என்ற கானகுணங்கள் 10. ஸம்சயம், பயம், கூவுதல், தெளிவில்லாமை, மூக்கால் பாடுதல், செ

றப்பான குரல், எப்பொழுதும் உயர்ந்தகுரல், ஸ்தானங்களுடைய நியமமில்லாமை, ஸ்வரப்பிசகாய்ப்பாடுதல், ரஸத்திற்கு ஒவ்வாமலிருத்தல், பாகங்கள் ஒன்றிற்கொன்று பொருத்தமில்லாதிருத்தல், எப்பொழுதும் விஷமமாய்த்தாளம்போடுதல், எப்பொழுதும் வருத்தத்தோடு பாடுதல், தாளக்கட்டுப்பாடில்லாமல் பாடுதல் இவை 14-ம் கானத்தின் தோஷங்கள். கானசாஸ்த்ரநிபுணர்கள் ஸ்வரம், தாளம் ஸரியாயிருக்கிறதாவென்று கவனிக்கிறார்கள்; பண்டிதர்கள் பதங்களை ஸரியாகப்பிரித்துச்சேர்க்கிறாவென்று கவனிக்கிறார்கள்; ஸ்த்ரீகள் காதிற்கு இன்பமாயிருக்கிறதாவென்று கவனிக்கிறார்கள்; மற்றவர்கள் பாடும்பொழுது சப்தம் வெகுதூரம் கேட்கிறதாவென்று கவனிக்கிறார்கள்.—நாரதீயசிக்ஷை.]

கமகங்கள்.—திரிபம், ஸ்புரிதம், கம்பிதம், லீனம், ஆந்தோளிதம், வலி, த்ரிபின்னம், குறுலம், ஆஹதம், உல்லாஸிதம், பல்லாவதம், கும்பிதம், முத்ரிதம், நாமிதம், மிச்ரிதம் என்று 15.

தற்காலத்தில் வழங்கும் கமகங்கள்: 1. ஆரோஹணம்.—ஸ்வரங்களை வரிசையாக மேலே அகாரமாகப்பாடுவது—ஸரிகமபதநிஸ.

2. அவரோஹணம்.—அப்படியே வரிசையாக மேலிருந்து கீழே பாடிக்கொண்டு வருவது—ஸநிதபமகரிஸ. இவ்விரண்டிற்கும் பிருகாவென்று பெயர்.

3. தந்தியை மீட்டினவுடனே ஒரு ஸ்வரத்தைப்பேசும்படி செய்வதும், ஒரு ஸ்வரத்தை ஆரம்பத்தில் காட்டி முடிவில் மற்றொரு ஸ்வரத்தை வெளிக்குப்பேசும்படி செய்வதும் டாலு—ஸபாஸமாஸகா.

4. ஸ்வரங்களை இரட்டை வரிசையாகப்பேசும்படி செய்வது ஸ்புரிதம்—ஸஸரிரிககமம, ஸஸநிநிததபப.

5. ஒரே ஸ்வரத்தை அசைத்துக்கொண்டு நிற்பது கம்பிதம்—பாபபபபப.

6. ஆரோஹணத்தில் ஒரு ஸ்வரத்திலிருந்து மற்றொரு ஸ்வரத்திற்கு அடித்துக்கொண்டுபோகும் ரீதி ஆஹதம்—ஸரிரிககமமப.

7. அப்படியே அவரோஹணத்தில் செய்வது ப்ரத்யாஹதம்—ஸநிநிததபபமம.

8. மும்மூன்று ஸ்வரங்களாகப் பேசும்படி செய்வது திரிபுச்சம்—ஸஸஸ, ரிரிரி, ககக, மமம.

9. முன்னும் பின்னுமாக ஸ்வரங்களைப் பேசும்படிசெய்வது ஆந்தோளம் (ஜாரு)—ஸரிஸபாப, ஸரிஸமாம.

10. ராகத்தின் ஆரோஹண அவரோஹணத்தில் அதன் ஸ்வரூபத்தைக்காண்பிப்பது மூர்ச்சனை—ஸரிமபதஸ, ஸநிதபமகரிஸ.

ஸ்தாயங்கள்.—ராகத்தின் அவயவங்கள் ; சப்தம், டாலம், லவனீ, வஹனீ, வாத்யசப்தம், யந்த்ரம், சாயை, ஸ்வரஸிங்கிதம், ப்ரேரிதம், தீக்ஷ்ணம் என 10. ப்ரஸித்தமான ஸ்தாயங்கள் 33. கொஞ்சம் ப்ரசித்தமான (அஸங்கீர்ண) ஸ்தாயங்கள் 20. குணங்களால் பின்னமானவை 33. ஆக ஸ்தாயங்கள் 96.

ராகத்தினுடைய ஸ்வபாவமான சாயை ராககாகு எனப்படும். அன்யராகத்தின் கலப்பு அன்யராககாகு எனப்படும். தேசராகங்களின் கலப்பு தேசகாகு வெனப்படும். வீணை முதலான யந்த்ரங்களின் சப்தம் கலப்பது யந்த்ரகாகு எனப்படும்.

ஒரு ராகத்தை விசித்ரமான வர்ணம், அலங்காரம், கமகம், ஸ்தாயம், ப்ரயோகம், பங்கி முதலியவைகளால் மாற்றியும் மறைத்தும் காட்டுவது ராகத்தின் ஆலாபம் எனப்படும்.

அது ராகாலாபம், ரூபகாலாபமென இருவகை.

ப்ரபந்தத்தை அபேக்ஷியாமல் ராகத்தைமாத்ரம் விஸ்தாரப்படுத்துவது ராகாலாபம் எனப்படும். ஒவ்வொரு ராகத்திற்கும் அம்சஸ்வரங்களான ஷட்ஜம் முதலியவைகளில் ராகமானது ஸ்திரமாய் எங்கே நிற்கிறதோ அந்த ஸ்வரம் ஸ்தாயீஸ்வரம் எனப்படும். அந்த ஸ்வரத்திலிருந்து ஆரோஹணவரிசையாய் நான்காவது ஸ்வரமானது த்வ்யர்த்தம் என்று சொல்லப்படும். அதற்கு அடுத்த ஸ்தாயியின் முதல ஸ்வரம் அதற்கிரட்டிப்பாதலால் த்விகுணம் என்று சொல்லப்படும்; ஸ்தாயிஸ்வரம் முதற்கொண்டு த்வ்யர்த்த ஸ்வரம்வரையில் எல்லையாக வைத்துக்கொண்டு அதற்குக்கீழேயிருக்கும் ஸ்வரங்களையும் கீழ்ஸ்தாயி ஸ்வரங்களையும், அந்தராகத்திற்குத்தகுந்த ஸ்புரிதம், கம்பிதம் முதலான கமகங்களால் விஸ்தரித்து ஸ்தாயீஸ்வரத்தில் கொண்டுவந்து நிறுத்துவது முகசாலமெனப்படும். இது முதல்வகை. முன் சொன்ன ஸ்வரங்களோடு த்வ்யர்த்தஸ்வரத்தையும் சேர்த்து ஆலாபனஞ்செய்து ஸ்தாயீஸ்வரத்தில் நிறுத்துவது இரண்டாவதுவகை. த்விகுணஸ்வரத்திற்குக்கீழ்ப்பட்ட ஸ்வரங்களை விஸ்தரித்து ஸ்தாயீஸ்வரத்தில் நிறுத்துவது மூன்றுவதுவகை.

த்விகுணஸ்வரத்தையும் அதற்கு மேற்பட்ட ஸ்வரங்களையும் விஸ்தரித்து ஸ்தாயீஸ்வரத்தில் நிறுத்துவது நான்காவதுவகை.

சப்தங்களுடைய சேர்க்கையான ப்ரபந்தத்தை ராகத்திற்கும் தாளத்திற்கும் அமைத்துப்பாடுவது ரூபகாலாபம் எனப்படும்.

அது ப்ரதிக்ரஹணிகாயென்றும் பஞ்சனியென்றும் இருவகை.

ராகத்தின் அவயவமாகிய ஸ்தாயத்தை முதலில் விஸ்தாரமாய்ப்பாடிப் பிறகு அந்த ஸ்தாயத்திற்குத் தகுந்த தனக்கிஷ்டமான ப்ரபந்தத்தை அந்த ஸ்தாயத்தில் அமைத்துப்பாடுவது ப்ரதிக்ரஹணி யென்று பெயர்.

ப்ரபந்தத்திலுள்ள பதங்களை (விதாரி முதலான அவாந்தர பாகங்களை) அவைகளுக்கேற்பட்ட காலப்ரமாணப்படி, பாடப்படும் ப்ரபந்தத்திற்கு அவயவமாயிருக்கும் ஸ்தாயத்தை விசித்ரமாயும் அநேக ரீதியாயும் பாடுவது ஸ்தாயபஞ்சனியெனப்படும்.

ப்ரபந்தத்திலிருக்கும் ஸகலபதங்களையும் அதே காலப்ரமாணப்படி அப்பொழுது அமைக்கப்பட்டிருக்கும் தாளம் ஸ்தாயங்களைப்போன்ற தாளங்களாலும், அந்தந்த ராகங்களுக்கு உசிதமான சமகம் முதலான அவயவங்களுடனும் தாதுவைமாற்றிப்பாடுவது ரூபகபஞ்சனியெனப்படும்.

இப்படி ரூபகாலாபத்தில் முதலில் ஸ்பஷ்டமாய் வெளிப்பட்ட ராகஸ்வரூபமானது ஸ்தாயப்ரதிக்ரஹத்தினாலும் பஞ்சனிகளாலும் இன்னும் தெளிவாகிறது. தேவதத்தனென்பவன் ஜனக்கூட்டத்தில் புகுந்தால் அவனுடைய ஸ்வரூபம் மறைந்துபோம்; ஆனால் ஏதோ கார்யமாக அங்குமிங்கும் அவன் அலைந்துகொண்டிருந்தால் கொஞ்சங்கொஞ்சம் தெளிவாக அவனுடைய ஸ்வரூபம் வெளிப்படும்; அநேக வர்ணங்களுள்ள மணிகளோடு முத்தையும் ஒரு கயிற்றில் கோர்த்தால் அதனுடைய ஸ்வரூபம் மற்ற மணிகளால் மறைக்கப்படும்; அந்தக் கயிறு தளர்ந்திருந்தால் அங்குமிங்கும் மணிகள் அசைவதால் முத்தினுடைய ஸ்வரூபம் கொஞ்சங்கொஞ்சமாய் வெளிப்படும். இப்படி ராகத்தின் ஸ்வரூபம் ரூபகாலாபத்தால் வெளிப்படும். மேன்மையான தேஹகாந்தி, (வர்ணங்கள்) உத்தமமான ஆபரணங்கள் (அலங்காரம்), உட்காருவதிலும் (ஸ்தாயம்), நடப்பதிலும் (சமகம்), ஒய்யாரம், முதலிய லக்ஷணங்களுடைய ஓர்ஸ்த்ரீ, தனக்குப்ரியமான நாயகனைக்காணும் பொழுது ஒரு ஸமயத்தில் தனது அவயவங்களைச் சற்றுத்தெரியும்படி காட்டுவாள்; மற்றொரு ஸமயத்தில் அவைகளையே மறை

வைக்கவரும்படி மறைத்துக்கொள்வாள்; மறைத்திருக்கும் அவயவங்களை ஒரு ஸமயத்தில் ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டுக் கொண்டு காட்டுவாள்; அப்படியே மேற்சொன்ன லக்ஷணங்களோடு கூடிய ஆலாபமானது நான்குவகைகளால் ராகத்தைச் சில ஸமயங்களில் வெளிப்படுத்தும்; சிலஸமயங்களில் மறைக்கும்; சிலஸமயங்களில் மறைந்திருக்கும் ஸ்வரூபத்தை ப்ரதிக்ரஹம், பஞ்சனி முதலியவைகளால் வெளிப்படுத்தும்.

விருந்தம்.—பாடகர்களும் வாத்யக்காரர்களும் சேர்ந்தது விருந்தமெனப்படும்.

அது உத்தமம், மத்யமம், கனிஷ்டம் என மூவகை.

காயனவிருந்தம். (புருஷர்கள்.)

வகை.		முக்ய பாடகர்கள்.	கூடப்பாடுகிறவர்கள்.	ஸ்த்ரீ பாடகர்கள்.	வேறு வாத்யக்காரர்கள்.	மிருதங்கக்காரர்கள்.
1. உத்தமம்	...	4	8	12	4	4
2. மத்யமம்	....	2	4	6	2	2
3. அதமம்	....	1	3	4	2	2

காயனீவிருந்தம். (ஸ்த்ரீகள்.)

வகை.		முக்யபாடகர்கள்.	கூடப்பாடுகிறவர்கள்.	ஸ்த்ரீபாடகர்கள்.	வேறு வாத்யக்காரர்கள்.	மிருதங்கக்காரர்கள்.
1. உத்தமம்	...	2	10	...	2	2
2. மத்யமம்	...	1	4	...	2	2
3. அதமம்	....	இதற்குக் குறைந்தது.				

குறிப்பு:— உத்தமத்திற்கு மேற்பட்டது கோலாஹலம் எனப்படும்.

முக்யபாடகர்களை அனுஸரிப்பதும், அவர்களுடன் சேர்வதும், தாளம், செய்கை இவைகளில் அவர்களுடன் ஒத்திருப்பதும், ஒருவர் விட்டாலும் மற்றவர்கள் அதைப் பூர்த்திசெய்வதும், மூன்று ஸ்தாயிகளிலும் நன்றாயும் பூர்ணமாயும் ஸஞ்சரிப்பதும், சாரீரங்களுடைய ஒற்றுமையும் விருந்தத்தின் ஆறுலக்ஷணங்கள்.

தாளவிவரணம்.—[காலம், க்ரியை, மானம் இம்மூன்றும் எப்பொழுது சேர்ந்திருக்குமோ அப்பொழுது தாளத்தினுடைய உத்பத்தி.—அமரஸிம்ஹன.] க்ஷணம் முதலியவை காலம்; அடிக்கப்படும் இரண்டு வஸ்துக்களின் சேர்க்கை க்ரியை; க்ரியைகளுக்கு நடுவிலிருக்கும் இடைவெளி மானம்; கைகளைச் சேர்த்தல, பிரித்தல், தசப்ராணங்கள் என்ற லக்ஷணங்களையுடையது தாளம். கீதம், வாத்யம், நிருத்யம் இம்மூன்றும் இதில் தங்கியிருப்பதால் இதற்குத்தாளமென்று பெயர் வந்தது. "கீதம், வாத்யம், நிருத்யம் இம்மூன்றும் யானையைபபோலும், தாளம் அதையடக்கும் அங்குசத்தைப்போலும" என்று காத்யாயனர் சொல்லுகிறார். லயம் என்பது அகண்டகாலம்; அதனுடைய எந்தப்பாகமும் அதில் நடக்கும் கார்யங்களால் நிர்ணயிக்கப்படும். ஸங்கீதத்தில் ஓர் ப்ரபந்தத்தின் ஆரம்பமுதல் முடிவுவரையில் வ்யாபித்திருக்கும் காலப்ரவாஹத்திற்கு லயமென்று பெயர். அது விளம்பிதம் (மெது), மத்யம், த்ருதம் (வேகம்), என மூன்றுவகை. மாத்ரைகளின் க்ரமமான அமைப்பிற்கு ஒத்து லயமானது அளக்கப்படும்பொழுது அது தாளமெனப்படும். தாளம் சந்தஸை ஆதாரமாகவுடையது.

தசப்ராணங்கள்.

1. காலம.	6. ஜாதி.
2. மார்க்கம்.	7. கலை.
3. க்ரியை.	8. லயம்.
4. அங்கம்.	9. யதி.
5. க்ரஹம்.	10. ப்ரஸ்தாரம்.

—(ஸங்கீததர்ப்பணம்.)

1. **காலம்.**—நூறு தாமரையிதழ்களையடுக்கி மேலிதழை ஊசியால் குத்தும் நேரம் க்ஷணமெனபபடும்.

க்ஷணங்கள	8=1	லவம்.
லவங்கள்	8=1	காஷ்டை.
காஷ்டைகள்	8=1	நிமிஷம்.
நிமிஷங்கள்	8=1	த்ருடி.

த்ருடிகள்	2=1	த்ருதம்.
த்ருதங்கள்	2=1	லகு.
லகுக்கள்	2=1	குரு.
லகுக்கள்	3=1	ப்லுதம்.
லகுக்கள்	4=1	காகபாதம்.

குறிப்பு :—மனுஷ்ய, ஸ்வாக, ஹம்ஸ, தேச்ய, சித்ர, திவ்ய, ஸிம்ஹ, வர்ண, வாத்ய, கா்ஞட என லகுக்கள், 10 வகை. அவைகள் முறையே 4, 3, 7, 5, 9, 6, 8, 10, 12, 16 அக்ஷரகாலங்களைக் குறிக்கும். அவற்றுள் முதல ஐந்தும லகுக்களென்று தற்கால வழக்கம. (திவ்யமென்பது ஸ்வர்க்கத்தின் மத்யகாலம் ; ஸிம்ஹமென்பது மனுஷ்யத்தின மத்யகாலம் ; வர்ணமென்பது தேச்யத்தின மத்யகாலம ; வாத்யமென்பது ஸ்வர்க்கத்தின் த்ருதகாலம் ; கர்ஞடமென்பது மனுஷ்யத்தின் த்ருதகாலம்.) இவைகளில் நாலு அக்ஷரகாலங்களாகக்குறிப்பதும சதுச்ரலகு முதலாவது. ஆகையால அதுவே லகுவென்ற பதத்திற்கு அர்த்தமாகத் தற்காலத்தில் வழங்குகிறது.

2. மார்க்கம் :—இது,

8 மாத்ரைகள்	=1 கலை	—	தக்ஷிணம்.
4	,,	—	வார்த்திகம.
2	,,	—	சித்ரம்.
1	,,	—	சித்ரதரம்.
$\frac{1}{2}$	,,	—	அர்த்தசித்ரம்.
$\frac{1}{4}$	,,	—	அதிசித்ரம்.

என்று ஆறுவகை ; இவை ஷட்காலமென்றும சொல்லப்படும். நான்கு அக்ஷரகாலங்கள் கொண்டது ஒரு மாத்ரை ; ஆகையால் அதிசித்ரம முதற்காலம, அர்த்தசித்ரம் இரண்டாங்காலம், சித்ரதரம மூன்றாவது காலம, சித்ரம நான்காவது காலம், வார்த்திகம ஐந்தாவது காலம், தக்ஷிணம் ஆறாவது காலம்.

3. க்ரியை.—இது மார்க்கம, தேசி என இரண்டுவகை. மார்க்கம், நிச்சப்தம, ஸசப்தம் என இரண்டுவகை. விரல்களை மடித்தல் (ஆவாபம்), விரல்களைத்திறத்தல் (விக்ஷேபம்), வலதுபுறம் கொண்டுவருதல் (ப்ரவேசம்), உயரமாயக் காண்பித்தல் (நிஷ்க்ராமம்) என்று நிச்சப்தம் நான்கு வகை. விரல்களைச் சப்தப்படும்படி சொடுக்தல் (த்ருவம), வலதுகைமேல் இடதுகையால் அடித்தல் (சம்பா), இடது கைமேல் வலதுகையால அடித்தல் (தாளம்), இரண்டுகைகளாலும் ஸமமாக அடித்தல் (ஸந்நிபாதம்) என்று ஸசப்தம் நான்குவகை.

[குறிப்பு:—அக்ஷரகாலத்தைக் கணக்கிடாமலாவது, அங்கங்களைத் தெளிவாகக் காட்டாமலாவது மொத்தக் குறிப்பாய் த்ருதகாலத்தில் அடிகளை மாத்ரம் போடும் தாளங்கள் சாப தாளங்கள் எனப்படும்.]

தேசி.—சப்தமில்லாமல் கூடிகைபோடுவது (த்ருவகம்); வலதுபுறமாய்க் கைநீட்டுதல் (ஸர்ப்பிணி); இடது புறமாய்க் கை நீட்டுதல் (கிருஷ்ணு); கீழ்முகமாகக் கைநீட்டுதல் (பத்மினி); வெளியே விசிறுதல் (விஸர்ஜிதா); மூடுதல் (விக்ஷிப்தா); உயரத்தூக்குதல் (பதாகா); இடதுபுறத்திற்குக் கொண்டுவருதல் (பதிதா) என எட்டுவகை.

4. அங்கம்—அனுத்ருதம் (விராமம்), த்ருதம், லகு, குரு, ப்லுதம், காகபாதம் என்று ஆறுவகை. அவை முறையே 1, 2, 4, 8, 12, 16 அக்ஷரகாலங்களுள்ளவை. த்ருதசேகரத்தைச் சேர்த்தால அங்கங்கள் ஏழாகும். சதுரஸ்ரஜாதியில் நாலு அக்ஷரகாலமாயும், திஸ்ரத்தில் மூன்றாயும், மிச்ரத்தில் ஏழாயும், கண்டத்தில் ஐந்தாயும், ஸங்கீர்ணத்தில் ஒன்பதாயும் லகு ஐந்துவகைப்படும்.

ஸப்தாங்கம்.

லக்கம்.	அங்கப் பெயர்.	அங்க விவரம்.	அக்ஷர காலம	மாத்ரை.
1	அனுத்ருதம் ..	1 அனுத்ருதம் ...	1	¼
2	த்ருதம் ..	2 அனுத்ருதம் ..	2	½
3	த்ருதசேகரம் .	1 த்ருதம, 1 அனுத்ருதம்	3	¾
4	லகு ...	1 லகு ..	4,3,7,5,9	{1 ¾, 1¾, 1¼, 2¼}
5	குரு ...	1 லகு, 2 த்ருதம் ...	8	2
6	ப்லுதம் ..	2 லகு, 2 த்ருதம் ..	12	3
7	காகபாதம் ...	4 லகு ...	16	4

அனுத்ருதத்தை ஒரு காதையாலும்; த்ருதத்தை ஒரு காதை ஒரு விஸர்ஜிதத்தாலும்; த்ருதசேகரத்தை இரண்டு காதைகள் ஒரு விஸர்ஜிதத்தாலும்; லகுவை ஒரு காதை (ஜாதியையனுஸரித்து முறையே) 3, 2, 6, 4, 8 விரல்களாலும்; குருவை ஒரு காதை ஏழுவிரல்களாலும்; ப்லுதத்தை நாலக்ஷரகாலங்கள் கொண்ட ஒரு காதை ஒரு கிருஷ்யை ஒரு ஸர்ப்பிணியினாலும்; காகபாதத்தை காலக்ஷரகாலங்கள் கொண்ட ஒரு காதை ஒரு பதாகம் ஒரு கிருஷ்யை ஒரு ஸர்ப்பிணியினாலும் வழங்கவேண்டும்.

ஸப்தாங்க ஸம்யோகத்தால் ஏற்பட்ட ஷோடசாங்கங்கள்.

லக்கம்.	அங்கத்தின் பெயர்.	அக்ஷர காலம்.	மாத்திரை.
1	அனுத்ருதம் ...	1	$\frac{1}{4}$
2	த்ருதம் ...	2	$\frac{1}{2}$
3	த்ருதவிராமம் (த்ருதசேகரம்) ...	3	$\frac{3}{4}$
4	லகு ...	4	1
5	லகுவிராமம் ...	5	$1\frac{1}{4}$
6	லகுத்ருதம் ...	6	$1\frac{1}{2}$
7	லகுத்ருதவிராமம் ...	7	$1\frac{3}{4}$
8	குரு ...	8	2
9	குருவிராமம் ...	9	$2\frac{1}{4}$
10	குருத்ருதம் ...	10	$2\frac{1}{2}$
11	குருத்ருதவிராமம் ...	11	$2\frac{3}{4}$
12	ப்லுதம் ...	12	3
13	ப்லுதவிராமம் ...	13	$3\frac{1}{4}$
14	ப்லுதத்ருதம் ...	14	$3\frac{1}{2}$
15	ப்லுதத்ருதவிராமம் ...	15	$3\frac{3}{4}$
16	காகபாதம் ...	16	4

5. கிரஹம்.—ஸ்வரம் முன்னும் தாளம் பின்னும் வருவது அதீதம்; ஸ்வரம் பின்னும் தாளம் முன்னும் வருவது அனாகதம்; ஸ்வரமும் தாளமும் ஸமமாய் வருவது ஸமம். இவை மூன்றும் கலந்து வருவது விஷமம்.

6. ஜாதி.—திஸ்ரம், சதுச்ரம், மிச்ரம், கண்டம், ஸங்கீர்ணம் என ஐந்துவகை. இவை முறையே 3, 4, 7, 5, 9 அக்ஷரகாலங்களுள்ளவை.

மூன்றுகொண்டதால் திஸ்ரம்; நான்குகொண்டதால் சதுச்ரம்; திஸ்ரமும் சதுச்ரமும் கலந்ததால் மிச்ரம்; திஸ்ரத்தையும் மிச்ரத்தையும் இரண்டாகக் கண்டித்ததால் கண்டம்; திஸ்ரமும் மிச்ரமும் கலந்த கண்டத்துடன் சதுச்ரமும் கலந்ததால் ஸங்கீர்ணமெனப்படும்.

7 களை.—அங்கங்களின் ஒவ்வொரு அக்ஷரகாலத்திற்குள்ளே அடங்கியிருக்கும் அக்ஷரகாலத்திற்குக் களையெனப்படும். களைகளின் சேர்க்கையானது கதியெனப்படும். அவை திஸ்ரகதி, சதுச்ரகதி, மிச்ரகதி, கண்டகதி, ஸங்கீர்ணகதி என ஐந்துவகை.

8. **லயம்.**—க்ரியைக்குப் பிறகு விச்ராந்தி (ஓய்வுகாலம்) லயமெனப்படும். அது விளம்பம், மத்யம், த்ருதம என மூன்று வகை; ஒன்றிற்கொன்று இரட்டித்தது. ஷட்காலங்களில் முதல் இரண்டும் விளம்பம்; மூன்றும் நான்கும் மத்யம்; ஐந்தும் ஆறும் த்ருதம்.

9. **யதி.**—ஸமம் (பிபீலிகம்), விஷமம், மிருதங்கம், வேதமத்யமம், கோபுச்சம், ஸ்ரோதோவஹம் என ஆறுவகை.

எறும்புச்சாரி ஊர்வதைப்போல், குருவாயிருந்தாலும் லகுவாயிருந்தாலும் ஒரேவிதமாய் வருவது ஸமம் அல்லது பிபீலிகம்.

எல்லா அங்கங்களும் க்ரமந்தப்பிவருவது விஷமம்.

மிருதங்கத்தின் ஓரங்கள் சிறுத்து நடுபாகம் பருத்திருப்பது போல், முதலில் லகுவாயும் நடுவில் குருவாயும் முடிவில் லகுவாயும் வருவது **மிருதங்கம்.**

உடுக்கின் ஓரங்கள் பருத்து நடுபாகம் சிறுத்திருப்பதுபோல் முதலிலும் கடையிலும் குருவாயும் நடுவில் லகுவாயும் வருவது **வேதமத்யமம்.**

பசுவின் வால் அடிபெருத்தும் வரவாச் சிறுத்திருப்பதுபோல் முதலில் குருவாயும் வரவாக குறைந்து முடிவில லகுவாயுமிருப்பது **கோபுச்சம்.**

நதியின் உத்பத்தி சிறுத்தும் வரவரப் பெருத்தும் வருவது போல் முதலில் லகுவான அங்கமாயும், வரவர விஸ்தரித்து முடிவில் குருவான அங்கமாயிருப்பது **ஸ்ரோதோவஹம்.**

10. **ப்ரஸ்தாரம்.**—பதினைந்து வகை.

1. ஒரு ப்ரஸ்தாரம இத்தனையாவது என்று கணக்குச்சொல்வது **நஷ்டம்.**

2. இது இத்தனையாவது ப்ரஸ்தாரமென்று கணக்குச்சொல்வது **உத்திஷ்டம்.**

3. ப்ரஸ்தாரங்களின் அங்கங்களில் குறைவான அங்கம் எவ்வளவு தடவை வந்திருக்கிறதென்று கணக்கிடுவது **பாதாளம்.**

4. எல்லா அங்கங்களும் எவ்வளவுதடவை வந்திருக்கின்றனவென்று கணக்கிடுவது **மஹாபாதாளம்.**

5. ஸமமான கலா காலங்களுள்ள ஒரே அங்கம் எத்தனை ப்ரஸ்தாரங்களில் வந்திருக்கிறதென்று அநுக்ருதத்தைக் கணக்குப்பார்ப்பது **அநுத்ருதமேரு.**

6. அப்படியே த்ருதத்தைக்கணக்கிடுவது த்ருதமேரு.

7. அப்படியே த்ருதசேகரத்தைக்கணக்கிடுவது த்ருதசேகர மேரு.

8. அப்படியே லகுவைக்கணக்கிடுவது லகுமேரு.

9. அப்படியே குருவைக்கணக்கிடுவது குருமேரு.

10. அப்படியே ப்லுதத்தைக்கணக்கிடுவது ப்லுதமேரு.

11. அப்படியே காகபாதத்தைக்கணக்கிடுவது காகபாதமேரு.

12. ஸமமான கலை காலங்களுள்ள அநேக அங்கங்கள் எவ்வளவு ப்ரஸ்தாரங்களில் வந்திருக்கின்றனவென்று கணக்கிடுவது ஸம்யோகமேரு.

13. அங்கங்கள் லோபமில்லாமல் ஸ்தானபேதங்களைமாத்ரம் அடையும்படி ப்ரஸ்தாரம்செய்வது கண்டப்ரஸ்தாரம்.

14. யதிகளுக்கனுசரித்து வகுப்பது யதிப்ரஸ்தாரம்.

தாளங்கள்: சதுரஸ்ரம், த்ர்யஸ்ரம் என இருவகை. அவைகளுக்கே சச்சத்புடம், சாசபுடம் என்றும் பெயர். த்ர்யஸ்ரமானது ஷட்பிதாபுத்ரகம், உத்கட்டம் என்று பேதப்படும். ஷட்பிதாபுத்ரகமானது ஸம்பக்வேஷ்டாகம் என்று பேதப்படும். இவைகள் முறையே யதாக்ஷரமென்றும், த்விகலமென்றும், சதுஷ்கலமென்றும் மூவகை.

எண்.	காலத்தின் பெயர்.	சச்சத் புடம்.	சாச புடம்.	ஷட்பிதா புத்ரகம்.	உத்கட் டம்.	ஸம்பக்வே ஷ்டாகம்.
1	யதாக்ஷரம	8	6	12	6	12
2	த்விகலம் ...	16	12	24	12	24
3	சதுஷ்கலம்	32	24	48	24	48

மாத்ரைகள்.

தற்காலத்தில் விசேஷமாய் வழங்கும் தாளங்கள்.— ரூபகம், சம்பை, த்ரிபுடை, அட, ஏக. அவைகளின் விவரங்கள்:—

		தாளங்கள்.	1 ரூபகம்.	2 சம்பெ.	3 த்ரிபுடை.	4 அட.	5 ஏக.
சதுச்ரஜாதி.		அக்ஷரகாலம் ...	6	7	8	12	4
	1.	சதுச்ரகதிகளை ...	24	28	32	48	16
	2.	திஸ்ரகதிகளை ...	18	21	24	36	12
	3.	மிச்ரகதிகளை ...	42	49	56	84	28
	4.	கண்டகதிகளை ...	30	35	40	60	20
	5.	ஸங்கீர்ணகதிகளை ...	54	63	72	108	36
திஸ்ரஜாதி.		அக்ஷரகாலம் ..	5	6	7	10	3
	1.	சதுச்ரகதிகளை ...	20	24	28	40	12
	2.	திஸ்ரகதிகளை ...	15	18	21	30	9
	3.	மிச்ரகதிகளை ...	35	42	49	70	21
	4.	கண்டகதிகளை ...	25	30	35	50	15
	5.	ஸங்கீர்ணகதிகளை ...	45	54	63	90	27
மிச்ரஜாதி.		அக்ஷரகாலம் ...	9	10	11	18	7
	1.	சதுச்ரகதிகளை ...	36	40	44	72	28
	2.	திஸ்ரகதிகளை ...	27	30	33	54	21
	3.	மிச்ரகதிகளை ...	63	70	77	126	49
	4.	கண்டகதிகளை ...	45	50	55	90	35
	5.	ஸங்கீர்ணகதிகளை .	81	90	99	162	63
கண்டஜாதி.		அக்ஷரகாலம் ...	7	8	9	14	5
	1.	சதுச்ரகதிகளை ...	28	32	36	56	20
	2.	திஸ்ரகதிகளை ...	21	24	27	42	15
	3.	மிச்ரகதிகளை ..	49	56	63	98	35
	4.	கண்டகதிகளை ...	35	40	45	70	25
	5.	ஸங்கீர்ணகதிகளை ...	63	72	81	126	45
ஸங்கீர்ணஜாதி.		அக்ஷரகாலம் ...	11	12	13	22	9
	1.	சதுச்ரகதிகளை ...	44	48	52	88	36
	2.	திஸ்ரகதிகளை . .	33	36	39	66	27
	3.	மிச்ரகதிகளை ...	77	84	91	154	63
	4.	கண்டகதிகளை ...	55	60	65	110	45
	5.	ஸங்கீர்ணகதிகளை ...	99	108	117	198	81

ஸங்கீதக்ரந்தங்கள்.

லக்கம்.	க்ரந்தத்தின் பெயர்.		க்ரந்தகர்த்தாவின் பெயர்.
1	ஸங்கீதமகரந்தம்	..	வேதர்.
2	ஸங்கீதமீமாம்ஸை	...	கும்பகர்ணமஹீமஹேந்த்ரர்.
3	ஸங்கீதமுக்தாவலீ	...	தேவன்ஞசார்யர்.
4	ஸங்கீதரத்னுகரம்	...	ஸ்ரீசார்ங்கதேவர்.
5	ஸங்கீதராகவம்	...	வேமபூபாலன்.
6	ஸங்கீதராஜம்	...	கும்பகர்ணன்.
7	ஸங்கீதவிருத்தரத்னுகரம்	...	விட்டலர்.
8	ஸங்கீதஸமயஸாரம	...	பார்ச்வதேவர்.
9	ஸங்கீதஸாராமிருதம்	..	துலஜேந்த்ரன்.
10	ஸங்கீதஸாரோத்தாரம்	...	ஹரிபட்டர்.
11	ஸங்கீதஸுதாகரம்	.	ஸிம்ஹபூபாலன்.
12	ஸங்கீதஸுதாகரம்	...	ஹரிபாலன்.
13	ஸங்கீதஸுந்தரம	...	ஸதாசிவதீக்ஷிதர்.
14	ஸங்கீதஸுராமிருதம்	...	தஞ்சாவூர் துலஜாதிபோஸ்லே மஹாராஜ.
15	ஸங்கீதவேத	...	சங்காராமன்.
16	ஸங்கீதாமிருதம்	.	கமலலோசனன்.
17	ஸங்கீதோபநிஷத்	...	ஸுதாகலசர்.
18	ஸாரஸம்ஹிதா	...	நாரதர்.
19	ஸ்வரமேளகலாநிதி	...	ராமாமாத்யன்.
20	ஸங்கீதரத்னுவலி	...	ஸோமராஜதேவன்.
21	அநூபஸங்கீதவிலாஸம்	.	பாவபட்டர்.
22	ஆனந்தஜீவனம்	...	மண்டனபாவராஜா.
23	கல்பதருவ்யாக்யாஸுபோதினி	.	கணேசதேவர்.
24	கீதாலங்காரம்	...	அனந்தநாராயணர்.
25	தாளாபிநயலக்ஷணம்	...	நந்திகேச்வரர்.
26	தாளதசப்ராணதீபிகா	...	கோவிந்தர்.
27	தாளதீபிகா	...	டிம்பபூபாலன்.
28	தாளலக்ஷணம்	..	நந்திகேச்வரர்.
29	த்ருவபதடீகா	.	பாவபட்டர்.
30	நாததீபிகா	...	பட்டாசார்யர்.
31	நாரதீசிக்ஷா	...	நாரதர்.
32	பஞ்சமஸாரஸம்ஹிதா	...	நாரதர்.
33	ராகசந்த்ரோதயம்	...	விமலர்.
34	ராகதத்வபோதம்	...	ஸ்ரீநிவாஸர்.
35	ராகநிரூபணம்	...	நாரதர்.
36	ராகமஞ்சரீ	...	புண்டரீகவிட்டலர்.
37	ராகமாலா	..	புண்டரீகவிட்டலர்.
38	ராகமாலா (அல்லது) ரத்னமாலா	..	க்ஷேமகர்ணர்.
39	ராகரத்னுகரம்	...	கந்தர்வராஜன்.
40	ராகவிசாரம்	...	ஸ்ரீராமர்.
41	ராகவிபோதம்	...	ஸோமநாதர்.

லக்கம்.	க்ரந்தத்தின் பெயர்.		க்ரந்தகர்த்தாவின் பெயர்.
42	ராகாதிஸ்வரநிர்ணயம்	...	ரகுநாததாஸப்ரஸாத்.
43	ச்ருதிபாஸ்கரம்	...	பீமதேவர்.
44	வீரபராக்ரமம்	...	வாஸுதேவர்.
45	ஹிருதயப்ரகாசம்	...	ஹிருதயநாராயணதேவர்.
46	ஷட்ராகசந்த்ரோதயம்	...	புண்டரீகவிட்டலர்.
47	ஸங்கீதசிந்தாமணி	...	கமலலோசனர்.
48	ஸங்கீததர்ப்பணம்	...	ஹரிவல்லபர்.
49	ஸங்கீததாமோதரம்	...	சுபங்கரர்.
50	ஸங்கீததீபிகா	...	திம்மபூபாலன்.
51	ஸங்கீதநாராயணம்	...	புருஷோத்தமமிச்ரர்.
52	ஸங்கீதபாரிஜாதம்	...	அஹோபலர்.

[குறிப்பு:—மேற்கண்ட விஷயங்கள் நாரதீயசிக்ஷா, ஸங்கீதஸமயஸாகரம், ஸங்கீதபாரிஜாதம், மாதங்கம், ராகவிபோதம், ஸங்கீததர்ப்பணம், காத்யாயனீயம், ஸங்கீதரத்நாகரம், ஸங்கீதசந்த்ரிகா, காயகலோசனம், ஸுபாஷித சாரங்கதரீயம முதலிய க்ரந்தங்களிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றன.]

நாரதர் நாகலோகத்திற்குச் சென்று அங்கே நாகராஜாக்களும் ஆதிசேஷனும் ப்ரமிக்கும்படி மஹதியென்னும் தன் வீணையை வாசிக்க, அவர்கள் பேசும்சக்தியற்றவர்களானதால் அவர்களுக்காக ஊதுகுழலாகிய நாகஸ்வரமென்ற வாத்யத்தைத் தயார் செய்து ஸங்கீதசாஸ்த்ரத்தை உபதேசித்தார்.

மஹாதேவரிடத்தில் உபதேசம் பெற்ற சார்ங்கதேவ மஹர்ஷியானவர் ஸங்கீதஸம்பந்தமான அநேக லக்ஷணலக்ஷ்யக்ரந்தங்களைசசெய்து பிருசாசவர் முதலிய தனது சிஷ்யர்களுக்குபதேசித்தார்.

ஆழ்வார்களும், சிவனடியார்களும் தாங்கள் செய்த பாடல்களில், வெண்பாவிற்குச் சங்கராபரணமும், அகவலுக்குத் தோடியும், கலிப்பாவிற்குப பந்துவராளியும், கலித்தொகைக்குப் பைரவியும், தாழிசைக்குத் தோடியும், விருத்தத்திற்குக் கல்யாணி காம்போதி மத்யமாவதியும், தேவாரத்திற்குப் பூபாளமும், மங்களத்திற்கு மங்களகௌசிகையும், தோடயத்திற்கு நாட்டை ஸௌராஷ்ட்ரமும், உலாவுக்கு ஸௌராஷ்ட்ரமும், பிள்ளைக்கவிக்குக் கேதாரமும், பரணிக்குக் கண்டாவும் ஒத்தவையென்று ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

நமது தேசத்தில் சகோடயாழ், மகரயாழ், பேரியாழ், செங்கோட்டியாழ் என்ற வாத்யங்கள் இருந்ததாகத்தெரியவருகிறது.

சாரவீணை, ஸ்திரவீணையென்று வீணை இரண்டுவகை. மஹதீ, ருத்ரவீணை முதலானவைகளைப்போல் காலத்திற்கும் இடத்திற்கும் தக்கபடி ச்ருதிகளைகூட்டி வாசிக்கப்படும் வீணைகள் சாரவீணையெனப்படும். ஸங்கீதத்தைச்சேர்ந்த வேதச்ருதிஜாதியான ஸகலச்ருதிகளையும் வீணையில் ஸ்திரமாக அமைத்து, அதை மானஸம், பம்பா முதலிய புண்யதீர்த்தக்கரைகளில் வைக்க, அந்த வீணையில் காற்றுத்தாக்கினவுடன ஒரு கம்பீரமான நாதம் உண்டாய் அவ்விடங்களில் ப்ரஹ்மத்யானம செய்துகொண்டிருக்கும் மஹர்ஷிகளின் செவிக்கும் மனஸிற்கும் அளவற்ற ஆநந்தத்தைக் கொடுக்கும். இது ஸ்திரவீணை.

பஞ்சபூதங்களில் ப்ருதிவியின் அம்சத்தால் ம்ருதங்கமும், ஜலத்தின் அம்சத்தால் சங்கமும், தேஜஸின் அம்சத்தால் காம்ஸ்யம் முதலிய லோஹங்களால் செய்யப்பட்ட தாளங்களும், வாயுவின அம்சத்தால் வீணை முதலிய வாத்யங்களும, ஆகாசத்தின் அம்சத்தால் நாதமும், நாதத்தால் எழுத்துகளும், எழுத்துகளால் பதங்களும், பதங்களால் வாக்யங்களும், வாக்யங்களால் ஸகலலோக வ்யவஹாரங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஸர்க்கம் 5.

ஆசார்யனையுடைய புருஷனே ப்ரஹ்மத்தையறிந்தவன். 'ஆசார்யனிடத்திலிருந்து அடையப்பட்ட வித்யையே ச்ரேஷ்டமானது' என்ற ச்ருதிகளின்படி 'ஆசார்யனிடத்திலிருந்து வித்யை அடையவேண்டியது' என்ற தத்வத்தைப் போதிப்பதற்காகத், தனக்கு நாரதரால் உபதேசிக்கப்பட்ட விஷயத்தைச் சுருக்கமாக வால்மீகிமஹர்ஷி முதல்ஸர்க்கத்தில் தெரிவித்தார். பிறகு இரண்டாவதில் தனது ஆசார்யனுடைய அனுக்ரஹத்தால் தனக்குக் காவ்யத்தைசசெய்ய சக்திகிடைத்த விதத்தையும்; மூன்றாவதில் காவ்யவிஷயங்களனைத்தையும தான் நேரில்பார்த்துத் தெரிந்துகொண்டதையும்; நான்காவதில் அந்த விஷயத்தைப்பற்றின காவ்யத்தைச்செய்யும் சாதுர்யத்தையும் வெளிப்படுத்தினார். பிறகு மஹாகருணையுள்ள வால்மீகிபகவான் ராமாயணமென்ற காவ்யத்தை ஆரம்பித்துக், தான்செய்ய உத்தேசித்த க்ரந்தம் விக்னமில்லாமல் முடிவு பெறுவதற்காகவும், ப்ரஸித்தியாவதற்காகவும, க்ரந்தங்களை ஆரம்பிக்கையில் செய்யும் 'ஆசீர்வாதம்' 'நமஸ்காரம்' 'விஷயத்தைக்

குறிப்பிடுதல்' என்ற மூன்றுவிதமங்களங்களுக்குள் மூன்றாவதான "வஸ்து நிர்தேசம்" என்ற மங்களத்தைச் செய்ய நிச்சயித்து, க்ரந்தத்தின் விஷயத்தையும் ப்ரயோஜனத்தையும்தெரிவித்து, ஸாதுக்களை இதைக்கொண்டாடவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறார்.

7. **ஏழுத்வீபங்களால்.**—கிஷ்கிந்தாகாண்டம் ஸர். 40, 41, 42, 43, நோட்டுகளைப்பார்க்க. இதனால் வர்ணிக்கப்படும் நாயகனுக்கு மஹா பாக்யத்வம் என்ற உத்தமநாயககுணம் பொருந்தியிருப்பதாய்க் காட்டப்படுகிறது.

8. **மனு.**—இப்பொழுது நடக்கும் ச்வேதவராஹகல்பத்தில் பதினான்குமன்வந்தரங்கள். அவைகளுக்கு முறையே ஸ்வாயம்புவர், ஸ்வாரோசிஷர், உத்தமர், தாமஸர், ரைவதர், சாக்ஷுஷர், வைவஸ்வதர், ஸாவர்ணி, தக்ஷஸாவர்ணி, ப்ரஹ்மஸாவர்ணி, தர்மஸாவர்ணி, ருத்ரஸாவர்ணி, ரௌச்யர், பௌத்யர் என்பவர்கள் மனுக்கள்.

மனு.—இப்பொழுது நடக்கும் வைவஸ்வதமன்வந்தரத்தில் **ச்ராத்ததேவர்** என்பவர் மனு. அவர் விவஸ்வானு (ஸூர்யனு)க்கும், விச்வகர்மாவின் புத்ரியான ஸம்க்ஞைக்கும் புத்ரர். இவருடன் பிறந்தோர்கள் யமனும் யமுனையும். (விஷ்ணுபுராணம். 3. 2.)

சென்ற கல்பத்தின் முடிவில் ப்ரஹ்மதேவர் யோகநித்ரையையடையும்போது வேதங்கள் அவருடைய முகத்திலிருந்து கீழே விழ, ஹயக்ரீவனென்ற அஸுரன் அவைகளையபஹரித்தான். அதைக்கண்டு மஹாவிஷ்ணு ஒரு சிறுமீனாக அவதரித்து, ஸத்யவ்ரதனென்ற அரசன் தர்ப்பணஞ் செய்துகொண்டிருக்கையில் அவன் கையிலிருக்கும் ஜலத்தில் தோன்றினார். அவன் அதை ஆற்றிலெறிய, அது தன்னை ரக்ஷிக்கும்படி அரசனைப் ப்ரார்த்தித்தது. அப்படியே அவனும் அதை வீட்டிற்கெடுத்துக்கொண்டுபோய் ஒரு பாத்ரத்தில் வைத்தான். அது வரவரப்பருத்துக் குளங்கள், ஏரிகள், நதிகள் ஒன்றிலும் அடங்காமலிருக்கக்கண்டு, முடிவில் அதை ஸமுத்ரத்தில் கொண்டுபோய்விட யத்னிக்கையில, அது தன்னை ஸமுத்ரத்தில் எறிந்துவிடவேண்டாமென்று ப்ரார்த்தித்தது. அரசனும, "இந்த மீன் பகவானுடைய அவதாரமாயிருக்கவேண்டும்; இல்லாவிடில இவ்வளவு சீக்ரத்தில் இப்படி வளரக்காரணமில்லை" என்று தனக்குள் யோசித்துக்கொண்டிருக்கையில் அது அவனைப்பார்த்து, "இன்றைக்கு ஏழாவது தினத்தில் மூன்று லோகங்களும் ப்ரளய ஜலத்தால் மூடப்படும். அப்பொழுது ஒரு பெரிய கப்பல் நீ

இருக்குமிடத்திற்கு வரும். நீ ஸகல ஓஷதிகள், விதைகள், மிருகங்கள், ஸப்தர்ஷிகளுடன் அதில் போயிரு. அது காற்றுல் அசைக்கப்படும்பொழுது ஒரு ஸர்ப்பத்தால் என்னுடைய தேஹத்துடன் அதைக்கட்டு. நான் ப்ரளயஜலத்தில் ஸஞ்சரித்துக் கொண்டு ப்ரஹ்மா விழித்துக்கொள்ளும்வரையில் உன்னைக்காப்பாற்றி உனக்கு உத்தமமான ப்ரஹ்மவித்யையையும் உபதேசிக்கிறேன்" என்று சொல்லி மறைந்தது. அந்த 'ஸத்யவ்ரத'னென்ற அரசனே 'ச்ராத்ததேவர்' அல்லது 'வைவஸ்வதமனு' வெனப்படுவார்.—(பாகவதம். 8. 24.)

தேவதைகள்.—ஆதித்யர்கள், வஸுக்கள், ருத்ரர்கள்.—(விஷ்ணுபுராணம். 3. 2.)

[ஆதித்யர்கள், வஸுக்கள், ருத்ரர்கள், விசுவேதேவர்கள், மருத்துக்கள், அசுவினீகுமாரர்கள், ரிபுக்கள்.—(பாகவதம். 8, 13.)

ஆதித்யர்கள், வஸுக்கள், ருத்ரர்கள், ஸாத்யர்களும், பிருகு அங்கிரஸ் என்பவர்களிடத்திலிருந்து உண்டானவர்களும்.—(வாயுபுராணம்.)

ஒவ்வொரு மந்வந்தரத்திலும் 49 மருத்துக்கள் பிறக்கிறார்கள்; ஒவ்வொரு மந்வந்தரத்திலும் அவர்களில் 28 பெயர்கள் முக்தியடைகிறார்கள்; அவர்களுக்குப்பதிலாக மற்றும் சிலர் பிறந்து அந்த ஸ்தானத்திற்கு வருகிறார்கள்.—(ஹரிவம்சம்.)]

இந்த்ரன்.—புரந்தரன.—(விஷ்ணுபுராணம். 3. 2.)

ஸப்தர்ஷிகள்.—வஸிஷ்டர், காச்யபர், அத்ரி, ஜமதக்னி, கௌதமர், விசுவாமித்ரர், பரத்வாஜர்.—(விஷ்ணு புராணம். 3. 2.)

[வஸிஷ்டபுத்ரரான வஸுமத, காதிபுத்ரரான விச்வாமித்ரர், பிருகுவம்சத்தில பிறந்த உருவின் புத்ரரான ஜமதக்னி, பிருஹஸ்பதியின் புத்ரரான பரத்வாஜர், உதத்யருடைய வம்சத்தில் பிறந்த கோதமபுத்ரரான சரத்வான், ப்ரஹ்மாவின் மானஸபுத்ரரான ப்ரஹ்மகோசர், அல்லது அத்ரி—(வாயுபுராணம்.)]

மனுபுத்ரர்கள்.—இக்ஷ்வாகு, ந்ருகன், த்ருஷ்டன், ஸர்யாதி, நரிஷ்யந்தன், நாபாகன், அரிஷ்டன், கருஷன், ப்ருஷத்ரன்.—(விஷ்ணுபுராணம். 3. 2.)

[இக்ஷ்வாகு, ந்ருகன், சர்யாதி, திஷ்டன், த்ருஷ்டன், கருஷன், நரிஷ்யந்தன், பிருஷத்ரன், நாபாகன், கவி.—(பாகவதம். 9. 2.)]

பகவானுடைய அவதாரம்.—மஹாவிஷ்ணு காச்யபருக்கு அதிதியிடத்தில் வாமனராய் அவதரித்துப் பலிசக்ரவர்த்தியை ஜயித்து மூன்று லோகங்களையும் புரந்தரனுக்குக் கொடுத்தார். (விஷ்ணுபுராணம். 3. 2.)

9. இக்ஷ்வாகு.—ஸர்க்கம் 70, நோட்டைப்பார்க்க.

10. அந்த ராஜவம்சத்தில்.—இதனால் "மஹாகுலீனத்வம்" என்ற குணமிருப்பதாகக்காட்டப்படுகிறது.

11. ஸகரன்.—ஸர்க்கம் 70, நோட்டைப்பார்க்க.

ஆ.—இக்ஷ்வாகுவம்சத்தரசர்கள் அநேகரிருக்க ஸகரனைக் குறிப்பிடுவானேன்?

ஸ:—இந்தப்பூமண்டலம் முழுதும் அவனால மறுபடி வெட்டிக்கிளப்பப்பட்டது; ஸமுத்ரம் உண்டாக்கப்பட்டது; மஹாபுண்யநதியான கங்கை ஸ்வர்க்கத்திலிருந்து வருவிக்கப்பட்டது.

15 ப்ரஸித்திபெற்றது. — "ப்ரஹ்மாவின் அனுக்ரஹத்தால் எனக்குக் கிடைத்தது. நான் அதைக்கேட்டுச்சொல்லுகிறவனே யொழிய எனக்கு வேறு யோக்யதையில்லை" யென்று வணக்கமாயச்சொன்ன வார்த்தை.

17. அஸூயை.—இந்தக்காவ்யம் ப்ரஹ்மாவால் உபதேசிக்கப்பட்டது. நான் கேவலம் அதை வெளிப்படுத்துகிறவன். ஆகையால் இதைக்கேட்பவர்கள் என்னிடத்தில் அஸூயைகொள்ள ந்யாயமில்லை. பக்தியுடன் கேட்கவேண்டியது.

இங்கே 'இக்ஷ்வாகுவின் வம்சத்தில்' என்றதால் க்ரந்தத்தின் விஷயமும், 'நான்கு புருஷார்த்தங்களையும்' என்றதால் ப்ரயோஜனமும், 'அஸூயையில்லாமல' என்றதால் அதிகாரியும் சொல்லப்பட்டன. மூலத்தில் தர்மம், அர்த்தம், காமம் என்ற மூன்று புருஷார்த்தங்கள் ப்ரயோஜனமாகச்சொல்லப்பட்டாலும், 'இதைக்கேட்பவன் ஸகலபாபங்களினின்றும் விடுபடுகிறான்' என்று சொல்லப்படுவதால் மோக்ஷம் என்ற புருஷார்த்தமும் ஸித்திக்கிறது. ஆகையால் 'நான்கு புருஷார்த்தங்களையும்' என்று மொழிபெயர்க்கப்பட்டது.

18. கேட்கவேண்டும்.—ஆதியில் இந்தக் காவ்யத்தைக் குசலவர்கள் பாடுகையில் ராமன் கேட்டபடியால் எல்லோரும் அப்படியே கேட்கவேண்டுமேயொழிய எழுதிப்படிப்பது அவ்வளவு ஆநந்தத்தைக்கொடுக்காது.

19. ஸரயூநதியின்.—பகவான் அவதாரஞ்செய்யத்திருந்த தேசத்தின் மஹிமை வர்ணிக்கப்படுகிறது.

'ஸரயூ' அல்லது 'கோக்ரா'வென்ற நதி ஹிமயமலையில் உத்பத்தியாய், 'ஔட்' என்னும் தேசத்தின் வழியாய் ஓடிக், கங்கையில் விழுகிறது. ஸரயூவும், 'தேவ' அல்லது 'கோக்ரா' என்ற நதியும் ஒன்றென்று பெரும்பாலும் எண்ணப்படுகிறது. ஆனால் அந்த தேசத்தில் வஸிக்கும் ஜனங்கள் அவைகளை வெவ்வேறென்று நினைக்கிறார்கள். வெவ்வேறிடங்களில் உத்பத்தியாய் வெகுதூரம்வரையில் சேர்ந்து ஓடிக், கங்கையில் விழும்போது வெவ்வேறு நதிகளாக விழுகின்றன.

கோஸலம்.—கோஸலராஜ்யத்தின் எல்லையிலுள்ள ஒரு சிறிய நகரமானது கங்கைக்கரையில் அந்த ராஜ்யத்திற்கும் பில்லஜாதியார்கள் வஸிக்கும் தேசத்திற்கும் நடுவிலிருந்ததாகத் தெரிகிறது. ஆகையால் கோக்ராவென்ற நதிக்கரையிலிருந்து கங்கைக்கரைவரையில் வ்யாபித்திருக்கலாம்.

தசரதர் உத்தரகோஸலத்தை ஆண்டுவந்தார்.—(ரகுவம்சம் 9. 1.)

25. அயோத்யா.—"தேவதைகளின் புரமான அயோத்யை" யென்று ச்ருதியில் இதைப்பற்றிச் சொல்லப்படுகிறது. தற்காலத்தில் கோக்ரா என்ற ஸரயூநதிக்கரையில், டில்லிபட்டணத்திற்குத் தென்கிழக்கில் ஏறக்குறைய 350-மைல் தூரத்திலிருந்தது. இப்போது அந்நகரம் அழிந்துபோயிற்று. கோக்ராநதியின் தென்கரையில் அவ்விடத்தில் காடும் செடியும் மரமும் புதரும் வெகுதூரம் பரவியிருக்கின்றன. அபூலபாஜல் என்ற மொகல்சரித்ரக்காரர், "அயோத்யை என்பது ஹிந்துஸ்தானத்திலுள்ள பெரிய நகரங்களிலொன்று. பூர்வகாலத்தில் அது 296-மைல் நீளமும் 72-மைல் அகலமுமுடைத்தாயிருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்நகரத்தைச் சுற்றியிருக்கும் மண்ணை வடிகட்டிப் பரிசோதித்தால் தங்கப்பொடிகள் கிடைக்கின்றன"வென்று 1582-ம் வர்ஷத்தில் எழுதியிருக்கிறார்.

அயோத்யையென்பது தற்காலத்தில் 'பைஜாபாட்' என்று வழங்கிவரும் நகரத்திற்கு ஸமீபத்திலிருந்தது.

அயோத்யாநகரம் பகவான் அவதரிக்கத்தகுந்ததென்று வர்ணிக்கப்படுகிறது.

26. பன்னிரண்டுயோசனை:—இது ப்ரதானநகரத்தின் விஸ்தீர்ணம். அதைச்சுற்றின உபநகரங்கள் சேர்ந்து அநேகயோசனைகளிருக்கும்.

41-5. சதக்னி:—அனேகம் பெயர்களைக் கொல்லும் ஓர் ஆயுதம். சிலர் தற்காலத்துப் பீரங்கியைப்போன்றதென்றும், சிலர் இரும்புமுள்ளுகள் பதிக்கப்பட்ட வட்டமான கல்லாலாவது இரும்பாலாவது செய்யப்பட்ட ஆயுதமென்றும் எண்ணுகிறார்கள். இது கோட்டைச்சுவர்களிலிருந்து சத்ருஸைன்யங்களின்மேல் ப்ரயோகிக்கப்படும்.

14. சோக்கட்டான்:—நடுவில் ராஜகிருஹமும் அதிலிருந்து நான்குபக்கங்களிலும் ராஜவீதிகளும் அவைகளுக்கு நடுவில் கட்டடங்களில்லாத ப்ரதேசமும் என்றர்த்தம்.

22. ஸூதர்கள்:—க்ஷத்ரியனுக்கும் ப்ராஹ்மணஸ்த்ரீக்கும் பிறந்த ஜாதியார். தேரோட்டுவதும் அரசர்களை ஸ்தோத்ரம் செய்வதும் அவர்களுடைய தொழில்.

மாகதர்கள்:—தற்காலத்தில் குஜராத்தேசத்தில் பட்டுகளென்று சொல்லப்படும் ஜாதியார்; வைச்யனுக்கும் க்ஷத்ரியஸ்த்ரீக்கும் பிறந்தவர்கள்; அரசர்களுக்கெதிரே அவர்களுடைய வம்சாவளியையும் முன்னோர்கள்செய்த வீரகிருத்யங்களையும் காட்டி, ச்லோகரூபமாய் அவர்களை ஸ்தோத்ரஞ்செய்கிறவர்கள்; ஸைன்யம் யாத்ரைசெய்யும்பொழுது வீரர்களுடைய சரித்ரங்களை வர்ணித்து, ஸேனைகளின் ச்ரமத்தைப்போக்கி, உத்ஸாஹத்தையும்தைர்யத்தையும் விருத்திசெய்கிறவர்கள்.

வந்திகள்:—அரசர்களுடைய பிருதுகளையும் கட்டியங்களையும் கூறுவதும், அவர்களுக்கெதிரே அவர்களுடைய கீர்த்தியைப் புகழ்வதும், ஸைன்யத்துடன் சென்று வீரரஸப்ரதானமான பாட்டுகளைச் சொல்வதும் அவர்களுடைய கடமை; க்ஷத்ரியனுக்கும் சூத்ரஸ்த்ரீக்கும் பிறந்தவர்கள்;

வைதாலிகர்கள்:—அரசனை விடியற்காலத்தில் இனிமையான கானத்தாலும் வாத்யத்தாலும் எழுப்புகிறவர்கள்.

23. பரதசாஸ்த்ரம்:—'பரதரெ'ன்ற ரிஷி காந்தர்வவேதத்திற்கு அதிஷ்டானகுரு; நாடகம், கானம், நர்த்தனம், அலங்காரம் முதலியவைகளைப்பற்றி ஸூத்ரங்களைச் செய்திருக்கிறார். அவை தற்

காலத்தில் கிடைக்கவில்லை. ஆகிலும் ஸம்ஸ்கிருதநாடகங்களுக்கு வ்யாக்யானம் செய்பவர்களால் அடிக்கடி எடுத்துச் சொல்லப்படு கின்றன. தற்காலத்தில் பரதசாஸ்த்ரத்திற்கு நர்த்தனமென்று அர்த்தஞ்செய்யப்படுகிறது. ஸங்கீதரத்னாகரத்தில் 6-வது அத்யாயத்தில் நர்த்தனத்தைப்பற்றிப் பூர்ணமாய்ச்சொல்லப்பட்டிருக்கிறது.

33. ஆஹிதாக்னி:—ஒவ்வொருநாளும் தவறுமல் காலையிலும் மாலையிலும் அக்னிஹோத்ரத்தைச் செய்பவன்.

42-3. மஹாரதன்:—தன்னையும் ஸாரதியையும் ரக்ஷித்துக் கொண்டு சத்ருக்களுடன் யுத்தஞ்செய்கிறவன். பதினாயிரம் சத்ருக்களுடன் ஒருவனாய் யுத்தஞ்செய்பவன்.

5. உதவியில்லாமல்:—"வார்த்தைகளால் சண்டைபோடுகிற வர்களுடன் வார்த்தைகளாலேயே சண்டைபோடவேண்டியது. ஸைன்யத்தில் வரிசையைவிட்டு ஒதுங்கி நின்றவர்களையாவது ஓடிப்போனவர்களையாவது அடிக்கக்கூடாது. ரதத்திலிருப்பவன் ரதவீரனோடும், யானையின்மேலிருப்பவன் யானையின்மேலிருப்பவனோடும், குதிரைமேலிருப்பவன் குதிரைமேலிருப்பவனோடும், காலாள் காலாளுடனும் சண்டைசெய்யவேண்டியது. ஒவ்வொருவனும் தன்னுடைய பலம் உத்ஸாஹம் இஷ்டம் யோக்யதைக்குத் தகுந்தபடி மற்றொருவனோடு யுத்தஞ்செய்யவேண்டியது. அதற்குமுன்பு அவனை எச்சரிக்கவேண்டியது. பயத்தினால் கலங்கியிருக்கிறவனையும், தன்னை நம்பிச் சண்டைக்குத் தயாராயில்லாதவனையும், மற்றொருவனோடு யுத்தஞ்செய்துகொண்டிருப்பவனையும், சரணமடைகிறவனையும், ஓடிப்போகிறவனையும், ஆயுதமற்றவனையும், கவசமில்லாதவனையும், ரதமோட்டுகிறவனையும், வாஹனங்களையிழுக்கும் மிருகங்களையும், ஆயுதங்களைச் சுமந்துபோகும் வேலைக்காரர்களையும், பேரீ சங்கம் முதலிய வாத்யங்களை வாசிப்பவர்களையும், அடிக்கக்கூடாது."—பாரதம். பீஷ்மபர்வம், அத். 1.

16. தசரதன்:—இவர் ஸூர்யவம்சசக்ரவர்த்தி; அஜனுடைய புத்ரர்.

ஸர்க்கங்கள் 5, 6, 7-ல், ராஜ்யம், ராஜதானி, ராஜா, மந்த்ரிகள், புரோஹிதர்கள், ராஜ்ய உத்யோகஸ்தர்கள், ஸைன்யம், ராஜநீதி முதலியவைகளைப்பற்றி அயோத்யாகாண்டம் 100-வது ஸர்க்கம் கேட்டைப்பார்க்க.

ஸர்க்கம் 6.

இந்த ஸர்க்கத்தில் பகவான் அவதரிக்கத் தகுந்த புருஷன் வர்ணிக்கப்படுகிறான்.

42. 24. அதிரதன்:—பதினாயிரம் மஹாரதர்களுடன் யுத்தஞ்செய்பவன்.

43. 15. குடும்பி:—தாய், தகப்பன், இரண்டு புத்ரர்கள், இரண்டு நாட்டுப்பெண்கள், பெண், பத்நி, அதிதி, தான் என்ற 10 பெயர்கள் அடங்கினது ஒரு குடும்பம்.

20. நாஸ்திகன்:—ஈச்வரனில்லையென்று வாதஞ்செய்பவன். இந்தக் கொள்கையைப்பற்றி வா-ரா- II 108, 109 ஐயும் நோட்டுகளையும் பார்க்க.

27. அப்யங்கஸ்நாநம்:—தைலங்களைத் தேய்த்துக்கொண்டு தலைமுழுகுதல்.

44. 10. சாந்த்ராயணம்:—சந்த்ரஸம்பந்தமான ஒரு வ்ரதம். இது அமாவாஸ்யைமுதல் பௌர்ணிமைவரையில் நாளுக்கொரு கவளமுயர்த்தியும், பௌர்ணிமைமுதல் அமாவாஸ்யைவரையில் நாளுக்கொரு கவளம் குறைத்தும் புஜித்து அநுஷ்டிக்கத்தக்கது. இது ப்ராயச்சித்தாங்கமாக முப்பது நாள்களில் செய்யக்கூடியது.

45. 1. காம்போஜம்:—இந்தியாவுக்கு வடமேற்கிலிருக்கும் தேசங்களில் ஒன்று. குதிரைகளுக்காகப் பெயர்போனது. அந்தத்தேசம் தங்கத்தாமரைப் புஷ்பங்களாலலங்கரிக்கப்பட்டிருக்கிறதென்று ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

காம்போஜதேசத்தார்கள் பூர்வத்தில் க்ஷத்ரியர்களென்றும், தங்களுடைய வைதிககர்மங்களைவிட்டதால் ஜாதியிலிருந்து தள்ளப்பட்டார்களென்றும், மனுஸ்ம்ருதி X. 43, 44-ல் சொல்லப்படுகிறது. பாரதம் ஸபாபர்வம் 27-ல் அர்ஜுனன் தரதர்களையும் காம்போஜர்களையும் ஜயித்ததாகச் சொல்லப்படுகிறது. தற்காலத்தில் தரதர்கள் ஜில்ஜித் (Gilgit) என்ற பள்ளத்தாக்கில் வஸிக்கிறார்கள். ஆகையால் காம்போஜர்கள் அதற்கடுத்த ஹிந்துகுஷ் என்ற மலைச்சாரல்களில் வஸித்திருக்கவேண்டியது. மேலும், தற்காலத்தில் அங்கிருக்கும் காப்பிரிஜாதியார் தங்களைக் காமோஜர்களென்று சொல்லுகிறார்கள். ஆனால் காம்போஜர்களும் தரதர்க

ளும் திபேட் (சிறிய) லடாக் என்ற ஸ்தலங்கள்வரையில் பரவியிருக்கலாம். பாரதம், ஸபாபர்வம் 51-ல் அவர்களுடைய தேசம் அழகான குதிரைகளுக்கும் ஆட்டுமயிராலும் நாயின் மயிராலும் செய்யப்பட்ட சால்வைகளுக்கும் பெயர்போனதென்று சொல்லப்படுகிறது. தற்காலத்து காஷ்மீர்சால்வைகள் அந்தத்தேசத்திற்கு வடக்கிலிருந்துவரும் ரோமத்தால் செய்யப்படுகின்றன. ஆகையால் காம்போஜம் காச்மீருக்கு வடக்கிலுள்ளது.—பூர்வீக ஆர்யபூகோளம்.

2. பாஹ்லீகம்:—இந்தியாவுக்கு வடக்கிலும் வடமேற்கிலுமிருக்கும் தேசம். தற்காலத்தில் "பால்க்"என்பது அதின் ஓர்பாகம். அது குதிரைகளுக்காகப் பெயர்போனதென்று பாரதம், உத்யோகபர்வத்தில், சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுதும் அதற்கு ஸமீபத்திலிருக்கும் பொக்காரா, மைமேனு என்ற நகரங்கள் சரேஷ்டமான குதிரைகளுக்காகப் பெயர்போனவை.

வனாயு:—இந்தியாவுக்கு வடமேற்கிலுள்ள ஓர் தேசம். குதிரைகளுக்காகப் பெயர்போனது.

ஸிந்து:—தற்காலத்தில் 'இண்டஸ்'என்ற நதியின் இருகரைகளிலுமுள்ள 'பஞ்சாப், ஸிண்ட்' என்றதேசங்கள்.

3. உச்சைச்ரவஸ்:—பாலகாண்டம் 45-வது ஸர்க்கம் நோட்டைப் பார்க்க.

8. ஐராவதம்:—ஐராவதம், புண்டரீகம், (மஹாபத்மம்) வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், ஸார்வபௌமம், ஸுப்ரதீகம் இவையெட்டும் கிழக்குமுதல் ஒவ்வொருதிக்கிலும் பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கும் கஜங்கள். அப்ரமு, கபிலா, பிங்கலா, அனுபமா, தாம்ப்ரபர்ணீ, சுப்ரதந்தீ, அங்கனா, அஞ்சனாவதீ இவையெட்டும் முறையே மேற்சொன்ன கஜங்களுடைய பார்யைகள்.

ஸர்க்கம் 7.

31. ஸுமந்த்ரர்:—இக்ஷ்வாகுவம்சத்தரசர்களுக்கு ஸாரதியும் முக்ய மந்த்ரியுமாயிருப்பவர். இவர் பூர்வயுகங்களில் வஸித்த சிரஜீவியென்று தெரிகிறது. இவர் ராமனுடைய ராஜ்ய காலத்தில் அவருக்கு முக்யமந்த்ரி. ஒருநாள் ராமன், ஸபையி

கிருக்கையில், ஒரு வேலைக்காரன் அவர் ஸமீபத்தில் வந்து நமஸ்கரித்து, "ஸ்வாமீ! தங்களுக்கு முக்யமந்த்ரியும் வெகு வயஸ் சென்றவருமான ஸுமந்த்ரர் இன்றையதினம் பரலோகம் சேர்ந்தார். அவருடைய பத்னிகள் அவருடன் அக்னிப்ரவேசம் செய்யவேண்டுமென்று தங்களுடைய அனுமதியைக் கேட்க வந்திருக்கிறார்களெ"ன்றான். அதைக்கேட்டு ராமன் மிகவும் துக்கமடைந்து, அதிவேகமாய் ஸுமந்த்ராருடைய கிருஹத்திற்குச சென்று, அங்கே அவருடைய ஜாதகத்தைப் பரிசோதிக்கையில், அதில் அவருக்கு 9999-வர்ஷங்கள். 11-மாஸங்கள் 21-தினங்கள் சென்றதாயும், 9-தினங்கள் பாக்கியிருப்பதாயும் தெரிந்தது. உடனே ராமன் குலகுருவான வஸிஷ்டரை நோக்கி, "ஸ்வாமி! கிருதயுகத்தில் மனுஷ்யர்களுக்குப் பூர்ணாயுஸ் லக்ஷம் வர்ஷங்களென்றும், த்ரேதாயுகத்தில் பதினாயிரம் வர்ஷங்களென்றும், த்வாபரயுகத்தில் ஆயிரம் வர்ஷங்களென்றும், கலியுகத்தில் நூறு வர்ஷங்களென்றும் ஏற்பட்டிருக்கிறது. அப்படியிருக்க ஸுமந்த்ராருக்கு இன்னும் 9-தினங்கள் ஆயுஷ்ப்ரமாணம் பாக்கியிருக்கின்றன. அதையறிந்தும் அவரை யமன் இன்றைக்கே கொண்டுபோயிருக்கிறான். நான் ராஜ்யபாலனம் செய்யுங்காலத்தில் இப்படி நடக்கலாமா? யுகதர்மம் பொய்யாகலாமா? என்னை அவமானஞ்செய்ததுபோலல்லவா? இப்பொழுதே அவனைச் சிக்ஷித்துக் காராகிருஹத்தில் தள்ளிவிடுகிறேன். ஸுமந்த்ரரையும் பிழைப்பிக்கிறேன். என் பராக்ரமத்தைப் பாருங்கள்" என்று சொல்லி,

உடனே புறப்பட்டுக் கருடன்மேலேறி அதிவேகமாய் யமனுடைய ராஜதானியான 'ஸம்யமினீ' பட்டணத்தைநோக்கிச் செல்லுகையில், வழியில் யமதூதர்கள் ஸுமந்த்ரரைக் கட்டிக் கொண்டு போவதைப் பார்த்தார். கோபங்கொண்டு அவர்களையடித்துத் துரத்திவிட்டு, ஸூக்ஷ்மரூபத்துடனிருக்கும் ஸுமந்த்ரரை விடுவித்தார். யமதூதர்கள் கைகூப்பி நமஸ்கரித்து, "ஸ்வாமீ! நாங்கள் தங்களுக்கு யாதொரு அபராதமும் செய்யவில்லையே. அப்படியிருக்க இந்தத் தண்டனை எங்களுக்குக் கிடைப்பதற்குக் காரணமென்ன?"வென்றார்கள். அதற்கு ராகவனும், இவருக்கு இன்னும் ஒன்பது தினங்கள் ஆயுஷ்ப்ரமாணம் பாக்கியிருக்க இன்றைக்கே ஏன் கொண்டுபோனீர்கள்?" என்றுகேட்டார். அவர்கள், "ஸ்வாமீ! இவர் பிறந்கவிதம் வெகு விசித்ரம். தாயின் கர்ப்பத்திலிருந்து முதலில்

தலையும் கைகளும் பிறகு அதற்குப் பத்தாவது தினத்தில் பாக்கி அங்கங்களும் வெளிப்பட்டன. அப்பொழுது ப்ராஹ்மணச்ரேஷ்டர்கள் மஹாமந்த்ரங்களால் இவரைக் காப்பாற்றினார்கள். ஆகையால் இவருக்கு 'ஸுமந்த்ர'ரென்று பெயர்வந்தது. இவருடைய சிரஸ் வெளிப்பட்டதுமுதல் ஆயுஷ்ப்ரமாணத்தைக் கணக்குச்செய்தால் இன்றுடன் முடிந்தது. தாங்கள் பூர்ணப்ரஸவமான தினம் முதல் கணக்குச்செய்கிறீர்கள். ஆகையால் இவருடைய ஜனன காலத்தைப்பற்றி பெரிய ஸந்தேஹமிருக்கிறது. நாங்கள் யாதொரு அபராதமும் செய்யவில்லை. தாங்கள் எங்களைத் தண்டித்ததும் வீண். இவரைத் திருப்பி அழைத்துப்போவதும் வீண்" என்றார்கள். அப்பொழுது ராகவன், "நீங்கள் கணக்குச்செய்வது பிசகு. என்றைக்கு இவர் தாயின் கர்ப்பத்திலிருந்து ஸுகப்ரஸவமாய் வெளியில் வந்தாரோ அன்று முதல்தான் இவருடைய ஆயுஷ்ப்ரமாணம் ஆரம்பிக்கிறது. அதற்கு 'உத்ஸாஹதின'மென்று பெயர்; அன்றைக்கே இவருடைய பிதாவும் ப்ராஹ்மணச்ரேஷ்டர்களும் ஜாதகர்மம் முதலிய ஸம்ஸ்காரங்களைச் செய்தார்கள் ஜ்யோதிஷசாஸ்த்ரத்தில் நிபுணர்கள் அதையே ஜன்மதினமாக எழுதிவைத்திருக்கிறார்கள். ஆகையால் இவருக்கு இன்னும் ஒன்பது தினங்கள் ஆயுஷ்ப்ரமாணம் பாக்கியிருக்கின்றது. அதற்குப் பிறகு நீங்கள் வந்து இவரைக் கொண்டுபோகலாம். அப்பொழுது தடுக்க மாட்டேன்" என்றார். அதைக்கேட்ட யமதூதர்களும் வாடின முகத்துடன் ஒன்றும் பதில்சொல்லாமல் கண்களில் நீர்பெருக யமனிடம் சென்றார்கள். ராமனும் ஸுமந்த்ரரையழைத்துக் கொண்டு தன் ஸைன்யங்களுடன் அயோத்யைக்குத் திரும்பி வந்து, ஸுமந்த்ரருடைய வீட்டிற்குச் சென்று, ப்ரலாபித்துக் கொண்டிருக்கும் அவர்களுடைய பந்துக்களிடத்தில் அவரை ஒப்புவித்தார். ஸுமந்த்ரர் தனக்கு ஒன்பது தினங்கள் ஆயுஸ் பாக்கியிருக்கிறதென்று தெரிந்துகொண்டு, ராமனுடைய உத்திரவால் ப்ரதிதினமும் அநேக தானதர்மங்களைச் செய்துவந்தார்.

இப்படியிருக்கையில் யமதூதர்கள் கோவென்று கதறிக்கொண்டு யமனுடைய ஸமீபத்தில் சென்று, கோபத்தால் தங்களுடைய தலைப்பாகைகளைக் கழற்றிப் பூமியிலறைந்து, "ஸ்வாமி! என்ன அதிகாரம் செய்கிறீர்கள்? இதென்ன பிழைப்பு? தங்களை யஜமானனென்று சொல்ல எங்களுக்கு வெட்கமாயிருக்கிறது.

நாங்கள் தங்களுத்திரவால் ஸுமந்த்ரரைக் கொண்டுவரப்போனோம். நடுவழியில் ராமசந்த்ரமூர்த்தி எங்களைத் தடுத்து இவ்விதமாய் அடித்துக் காயப்படுத்தி, 'இன்னும் ஸுமந்த்ரருக்கு ஒன்பது தினங்கள் பாக்கியிருக்க எப்படிக் கொண்டுபோனீர்கள்' என்று, எங்களிடத்திலிருந்த ஸுமந்த்ரரைப் பலாத்காரமாய்த் திருப்பி அழைத்துப்போய்விட்டார். எங்களுக்கு அந்த அவமானம் ஸஹிக்கமுடியவில்லை. ஜலத்தில் விழுந்து ப்ராணனை விடுகிறோம்" என்றார்கள். அதைக்கேட்டு யமனும் கோபத்தால் முகம் ஜ்வலிக்கத், தூதர்களைப்பார்த்து, "இந்தக்ஷணமே ராமனைக் கட்டிக்கொண்டுவருகிறேன். நமது ஸைன்யங்கள் புறப்படட்டும்" என்றுஉத்திரவு செய்தான்.

பிறகு இந்த்ரனிடத்திற்சென்று, "தோழா! ராமன் என்னை அலக்ஷ்யஞ்செய்து என்னுடைய தூதர்களையும் தண்டித்திருக்கிறான். அவனைச் சிக்ஷிக்கப்போகிறேன். நீயும் எனக்குத் துணையாய்வா"வென்றான். அதற்கு இந்த்ரன், "உனக்குப் பைத்யம்பிடித்ததா என்ன? ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவுடன் யுத்தஞ்செய்யப்போகிறாயோ! ராமனிடத்தில் நாமென்ன செய்யமுடியும்? வந்தபடியே உன் பட்டணத்திற்குப் போ. முன்னொருகாலத்தில் அவருக்குப் பயந்து நான் என்னுடைய லோகத்திலிருக்கும் பாரிஜாதவிருக்ஷத்தைக் கொண்டுபோய்க் கொடுத்தேன்" என்றான். பிறகு அக்னி, நிர்ருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், ஸூர்யன், சந்த்ரன், புதன், ப்ருஹஸ்பதி, சுக்ரன், சனி, ராஹு, கேது, அங்காரகன், துருவன், ப்ரஹ்மா, பாதாளலோகங்களில் வஸிப்பவர்கள், ஸப்தத்வீபங்களில் வஸிப்பவர்கள் எல்லோரையும் தனக்கு ஒத்தாசைசெய்யவேண்டுமென்று யமன் தனித்தனியாய் ப்ரார்த்தித்தான். அவர்களும் தேவேந்த்ரன் சொன்னபடியே மறுமொழி சொல்லியனுப்பினார்கள்.

பிறகு யமன் தன் ஸைன்யங்களுடன் அயோத்யாநகரத்தை முற்றுகைபோட்டு ராமனை யுத்தத்திற்கழைத்தான். அவரும் தன் புத்ரனை லவனை அனுப்ப, அவ்விருவருக்கும் கடுமையான யுத்தம் நடந்தது. முடிவில் யமன் வேறு உபாயமில்லாமல் காலதண்டத்தை ப்ரயோகித்தான். அதைக்கண்டு லவன் ப்ரஹ்மாஸ்த்ரத்தை ப்ரயோகித்தான். யமதண்டம் ப்ரஹ்மாஸ்த்ரத்

திற்குமுன் நிற்கமுடியாமல் திரும்பிப்போயிற்று. அப்பொழுது ப்ரஹ்மாஸ்த்ரம் யமனைத்துரத்த அவன் ஓட ஆரம்பித்தான். அதைக்கண்டு ஸூர்யபகவான் அம்சரூபியாய் அவ்விடம் வந்து லவனைப்பார்த்துக், "குழந்தாய்! நீயும் என் வம்சத்தில்பிறந்தவன்; இவனும் என் புத்ரன். அப்படியிருக்க உன் முன்னோரும் பூஜ்யருமான யமனை நீ உபத்ரவிப்பது ந்யாயமா? ஆகையால் நீ ப்ரயோகித்த ப்ரஹ்மாஸ்த்ரத்தை அழைத்துக்கொள். லோகத்தில் ஒருவனுக்குப் புத்திகெட்டால் எல்லோருக்கும் பைத்யம்பிடிக்குமா?" வென்றார். அதைக்கேட்டு, லவன் ப்ரஹ்மாஸ்த்ரத்தை வருவித்துக்கொண்டான்.

பிறகு ஸூர்யனும் யமனும் லவனை முன்னிட்டுக்கொண்டு அயோத்யைக்குச் சென்று, ராமனால் விசேஷமாய் உபசரிக்கப்பட்டார்கள். அப்பொழுது ஸூர்யன் ராமனுக்கும் யமனுக்கும் ஸமாதானம் செய்வித்தார். "நான் ராஜ்யபாலனம் செய்யும் வரையில் ஆயுஷ்ப்ரமாணம் முற்றிலும் கழிந்தவர்களையே கொண்டுபோகவேண்டும். ஒருவரையும் அல்பாயுஸில் கொண்டுபோகக்கூடாதென்று" ராமன் யமனுக்கு உத்திரவுசெய்தார்.

அதற்குப் பத்தாவது தினத்தில் ஸுமந்த்ரரும் அவருடைய ஸ்த்ரீகளும் ராமனை நமஸ்கரித்து, அவருடைய ஸந்நிதியில் ப்ராணனைவிட்டு, அவருடைய அனுக்ரஹத்தால் வைகுண்டம் சேர்ந்தார்கள். (ஆநந்தராமாயணம், ராஜ்யகாண்டம். 24).

46-6. வஸிஷ்டர்:—ப்ரஹ்மாவினுடைய மானஸபுத்ரர்களிலொருவர்; ப்ரஹ்மர்ஷி; ஸப்தர்ஷிகளிலொருவர்; ப்ரஹ்மாவினுடைய ப்ராணனிலிருந்து உண்டானவர்—(பாகவதம் III 12).

அவருடைய பத்னி, "ஊர்ஜை"என்று சொல்லப்பட்ட 'அருந்ததி'; அவள் கர்த்தமப்ரஜாபதிக்கும் தேவஹூதிக்கும் [தக்ஷப்ரஜாபதிக்கும் ப்ரஸூதிக்கும்] பிறந்தவள். சித்ரகேது, ஸுரோசி, விரஜா, மித்ரா, உல்வணு, த்யுமான், சக்தி, வஸுப்ருதயானர் முதலியவர்கள் வஸிஷ்டபுத்ரர்கள்—(பாகவதம் IV. 1). ரஜஸ், காத்ரன், ஊர்த்வபாகு, ஸவனா, அனகன், ஸுதபஸ், சுக்ரர் வஸிஷ்டபுத்ரர்கள். (விஷ்ணுபுராணம் I. 10.)

சக்தி முதலியவர்கள் வேறு பத்னியினிடத்தில் பிறந்தவர்கள். —(பாகவதம்.)

வாயுபுராணத்திலும் லிங்கபுராணத்திலும் 'கோத்ரன்' என்னு மிடத்தில், 'புத்ர, ஹஸ்த'என்றும், 'புண்டரீகா' என்ற ஒரு பெண் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

வஸிஷ்டருடைய மூத்த புத்ரன் மார்க்கண்டேயருடைய புத்ரியை விவாஹம்செய்து மேற்குதிக்கினுடைய லோகபாலனை கேதுமானைப்பெற்றதாக வாயுபுராணத்தில் சொல்லப்பட்டிருக் கிறது.

மேற்சொன்ன வஸிஷ்டபுத்ரர்கள் ஏழுபேர்களும் மூன்று வது மன்வந்தரத்தில் ஸப்தர்ஷிகளாயிருந்தார்கள்.

எட்டாவது சதுர்யுகத்தில் வஸிஷ்டர் வேதவ்யாஸராயிருந் தார்.

இக்ஷ்வாகுவின் பன்னிரண்டாவது புத்ரனான நிமியென்பவன் வைஜயந்தமென்னும் நகரத்தை ஸ்ருஷ்டித்து அதில் ராஜ்ய பாலனம் செய்துவந்தான். ஒருநாள் தான் ஒரு பெரிய யாகத்தைச் செய்து இக்ஷ்வாகுவின் மனதைத் திருப்திசெய்யவேண்டுமென்ற எண்ணமுண்டாயிற்று. ஆகையால் இக்ஷ்வாகுவை மர்யாதையு டன் வரவழைத்து, அந்த யாகத்தை நடத்திவைக்கும்படி வஸிஷ் டரை ப்ரார்த்தித்தான். அவரும், "நான் முன்பே தேவேந்த்ர னால் வரிக்கப்பட்டிருக்கிறேன். அந்த யாகம் முடிந்தவுடன் வந்து உன் யாகத்தை நடத்திவைக்கிறேன். அதுவரையில் பொறுத்திரு"வென்றார். அதற்கு அரசன் யாதொரு பதிலும் சொல்லாததால் வஸிஷ்டர் அவன் ஸம்மதித்ததாக எண்ணிக் கொண்டு இந்த்ரலோகம் சென்றார். பிறகு அவ்வரசன் கௌத மரை ரித்விக்காகவிருக்க ப்ரார்த்தித்து, 5000-வர்ஷங்கள் யாகஞ் செய்துவந்தான். அதற்குள் இந்த்ரனுடைய யாகம் முடிந்து, வஸிஷ்டர் அதிவேகமாய் நிமியினுடைய பட்டணத்திற்கு வந்தார். அங்கே தன் ஸ்தானத்தில் கௌதமரிருந்து யாகத்தை நடத்து வதைக்கண்டு, நிமியிடத்தில் மஹாகோபங்கொண்டு, அவன் அப்பொழுது தூங்கிக்கொண்டிருந்தாலும், "நான் வருகிறவரை யில் பொறுப்பதாய் என்னிடத்தில் சொல்லிவிட்டு, என்னை அலக்ஷ்யஞ்செய்து, எனக்குப்பதிலாகக் கௌதமரை நியமித்த படியால் உனக்குத் தேஹமில்லாமற்போகக்கடவது" என்று சபித் தார். நிமி விழித்துக்கொண்டு வஸிஷ்டர் தன்னைச் சபித்ததை யறிந்து, "நான் ஒப்புக்கொள்ளாமலிருக்க ஒப்புக்கொண்டதாகநீர்

பரிசித்தபடியாலும், நான் தூங்கும்போது என்னைச் சபித்தபடியாலும் உமக்கும் தேஹமில்லாமல் போகக்கடவது”என்று மறு சாபம் கொடுத்தான். உடனே இருவர்க்கும் தேஹமழிந்தது.

பிறகு வஸிஷ்டர் ப்ரஹ்மதேவரிடஞ்சென்று, “ஸ்வாமி! தேஹத்தையிழந்ததால் மிகவும் கஷ்டப்படுகிறேன். இதற்கென்ன உபாயமெ”ன்றுகேட்க; ப்ரஹ்மதேவரும் “மித்ரா! வருணர்களுடைய தேஜஸூடன் கலந்து அவர்களுக்குப் புத்ரனாய்ப் பிறப்பாய்” என்று அநுக்ரஹித்தார்.

அப்பொழுது வருணனுடைய அதிகாரத்தில் மித்ரனும் கலந்திருந்தான். ஒருநாள் அப்ஸரஸ்த்ரீகளுக்குள் முதன்மையான ஊர்வசியென்பவள் தனது தோழிகளுடன் ஸமுத்ரஸ்நாநத்திற்கு வர, வருணன் அவளைக்கண்டு மோஹித்துத் தன்னுடனிருக்கக் கேட்டுக்கொண்டான். அவள், “ஸ்வாமி! நான் முன்பே மித்ரனால் வரிக்கப்பட்டிருக்கிறேன். ஆகையால் என் தேஹம் அவரைச் சேர்ந்தது. என் மனஸூம் ப்ரீதியும் தங்களிடத்திலிருக்கிறது”என்றாள். அதற்கு வருணன், “அப்படியானால் உன்னை உத்தேசித்த என் தேஜஸை இதோவிருக்கும் கும்பத்தில் வைக்கிறேன்”என்றான். ஊர்வசியும் “அப்படியே ஆகட்டுமெ”ன்று ஸம்மதித்து மித்ரனிடம் சென்றாள்.

அதற்குள் மித்ரனும் தான் குறிப்பிட்ட காலத்தில் ஊர்வசி வராததால் அதே கும்பத்தில் தன் தேஜஸையும் வைத்திருந்தான். முதலில் மித்ரனுடைய தேஜஸிலிருந்து அகஸ்த்யரென்ற மஹர்ஷியுண்டானார். அவர் பிறந்தவுடன், “நான் உன் புத்ரனல்ல”வென்று மித்ரனிடத்தில் சொல்லிவிட்டுத் தபஸ்செய்யப் போய்விட்டார். பிறகு மித்ரனுடைய தேஜஸூம் வருணனுடைய தேஜஸூம் கலந்து அதிலிருந்து வஸிஷ்டர் பிறந்தார். பிறந்தவுடனேயே அவரை ஸூர்யவம்சத்திற்குக் குலகுருவாயிருக்கும்படி இக்ஷ்வாகு ப்ரார்த்திக்க, அவரும் அங்கீகரித்தார்—(வா. ரா. VII. 55, 56, 57. விஷ்ணுபுராணம் IV. 5). ருக்வேதத்தில் 7-வது மண்டலம் முழுவதும், ஒன்பதாவது மண்டலத்தில் 67, 90, 97-வது ஸூக்தங்களும் இவரால் செய்யப்பட்டன.

வஸிஷ்டருக்கும் விச்வாமித்ரருக்கும் நேர்ந்த விரோதத்தைப் பற்றி வா. ரா. I 51-முதல் 66-வது ஸர்க்கங்கள் வரையிலும் அவைகளின் கோட்டுகளையும் பார்க்க.

இவருடைய பெயரால் ஓர்ஸ்மிருதியும், இவர் ஸ்ரீராமருக்கு உபதேசஞ்செய்ததாகச் சொல்லப்படுகிற வாஸிஷ்டராமாயணமும் வழங்குகின்றன.

ப்ரஜாபதிகளில் ஒருவராயும் ஸப்தர்ஷிகளில் ஒருவராயுமிருக்கும் வஸிஷ்டர் ஒரேகாலத்தில் அநேகவிடங்களில் எப்படியிருக்கமுடியும்? ஸத்யலோகத்திலும் ஸப்தர்ஷிமண்டலத்திலும் தேவஸபையிலும் பூமியில் அநேகபாகங்களிலும் இருக்கமுடியுமா?

வஸிஷ்டர், காச்யபர், மார்க்கண்டேயர், வாமதேவர், முதலிய மஹாத்மாக்கள் தங்களுடைய அம்சங்களால் ஒரேகாலத்தில் அநேகவிடங்களில் இருக்கமுடியும். மஹாவிஷ்ணு வைகுண்டத்திலும் அயோத்யையிலும் ஸகல பூதங்களிலும் ஒரேகாலத்தில் விளங்கவில்லையா?

வாமதேவர்:—ஓர்மஹர்ஷி. ரிக்வேதம் 4-வது மண்டலம் 1—15, 18—41, 45—58-வது ஸூக்தங்களையும் செய்தவர்.

8. ரித்விக்குகள்:—யாகத்தை நடத்தும் பதினாறு புரோஹிதர்கள்.

மற்ற:—மேற்சொன்ன முக்யமான 8 மந்த்ரிகளைத் தவிரவேறென்று சிலர் எண்ணுகிறார்கள். 'மற்ற மந்த்ரிகள்' என்றபடியால் வஸிஷ்டரும் வாமதேவரும் மந்த்ரிகளென்று குறிப்பிடப்படுகிறது.—(தீர்த்தீயம்).

இப்படியல்ல. இங்கிருக்கும் பதங்களால் மற்றவர்களும் ரித்விக்குகளென்று ஏற்பட்டாலும், வஸிஷ்டரும் வாமதேவரும் மந்த்ரிகளென்று சப்தத்தினுடைய லக்ஷணத்தினாலும் வ்யங்க்யத்தினுடைய லக்ஷணத்தினாலும் ஏற்படவில்லை. ஆகையால், 'அப்படியே மற்றவர்கள்' என்றதற்கு 'ரித்விக்குகள்' என்றே அர்த்தம. 'மந்த்ரிகளாயும்' என்றதற்கு வஸிஷ்டர் முதலானவர்களென்றர்த்தம். தேசகார்யங்களை நிர்வஹித்து நடத்துகிறவர்கள் அமாத்யர்கள். ராஜ்ய ஸம்பந்தமான வ்யவஹாரங்களை ஆலோசனைசெய்கிறவர்கள் மந்த்ரிகள் [திலகம்].

திலகவ்யாக்யானத்துடன் வடக்குதேசங்களில் அச்சிட்டிருக்கும் ராமாயணத்தில் நாலாவது ச்லோகத்திற்குப்பிறகு, "ஸுயஜ்ஞர், ஜாபாலி, காச்யபர், கௌதமர், மார்க்கண்டேயர், காத்யாய

ணரென்ற மஹர்ஷிகளுடன்" என்றிருக்கிறது. இதனால் இவர்கள் வித்யாகுருக்களென்று தெரிகிறது.

ஆக்ஷேபம். வஸிஷ்டரே இக்ஷ்வாகுகுலத்திற்குப் புரோஹிதராயும் உபநயனம் முதலிய ஸம்ஸ்காரங்களைச் செய்விப்பவராயுமிருப்பதாலும், உபநயனம் செய்விப்பவரே வேதாத்யயனத்தையும் செய்விப்பவராயுமிருப்பதால் அவரே வித்யாகுருவாயிருக்கவேண்டும். மற்றவர்கள் எப்படியிருக்கமுடியும்?

ஸமாதானம். அப்படிச் செய்தால் தன் தபஸுக்குக் காலம் போதாதென்று நினைத்துத் தனக்கு ஸமமான சிஷ்யர்களைக்கொண்டு வித்யைகளை உபதேசித்தாரென்று சொல்வது ந்யாயம்; ஆகையால் அவர்களும் வித்யாகுருக்கள்.—(திலகம்).

9. **ஆன்வீக்ஷிகீ.** ஜீவகோடிகள் நித்யஸுகத்தையடைவதற்கு ஸாதனமான ஞானபாகங்கள் நான்கு:—ஆன்வீக்ஷிகீ, த்ரயீ, வார்த்தா, தண்டநீதி. இவைகளில் ஆன்வீக்ஷிகீ த்ரயியினுடைய ஒருபாகமென்று மனு எண்ணுகிறார், பிருஹஸ்பதியினுடைய சிஷ்யர்கள், வார்த்தா, தண்டநீதி என்றவைகளையே ஒப்புக்கொள்ளுகிறார்கள். சுக்ராசார்யருடைய சிஷ்யர்கள், தண்டநீதியைமாத்ரம் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் முதலில் சொன்ன நான்கும் புருஷார்த்தங்களையடைவதற்கு ஸாதனமென்று சாணக்யர் அபிப்ராயப்படுகிறார்.

ஆத்மவித்யையை உபதேசிப்பது ஆன்வீக்ஷிகீ; தர்மாதர்மத்தைப்பற்றி உபதேசிப்பது த்ரயீ; ஐச்வர்யத்தின் லாபநஷ்டத்தைப் பற்றியுபதேசிப்பது வார்த்தா; ந்யாயாந்யாயத்தைப்பற்றி உபதேசிப்பது தண்டநீதி; ஆனால் தண்டநீதியையறியாமல் மற்ற மூன்றும் ப்ரயோஜனப்படாது. தண்டநீதியில் நிபுணனானவன் மற்ற மூன்றையும் ஸுலபமாயறிகிறான்.

ஜீவன்களுடைய ஸுகதுக்கங்களின் ஸ்வரூபத்தை விசாரிக்கும ஞானசாஸ்த்ரமானது ஆன்வீக்ஷிகீயெனப்படும். அதினால் பதார்த்தங்களின் ஸ்வரூபக்ஞானம் பிறக்கிறது. பிறகு ஜீவன் ஸுகதுக்கங்களைத் தாண்டுகிறான். ரிக், யஜுஸ், ஸாமமென்ற மூன்றுவேதங்களும் த்ரயீயெனப்படும். சிலர், வேதாங்கங்கள், வேதங்கள், பூர்வமீமாம்ஸை, உத்தரமீமாம்ஸை, ந்யாயவிஸ்தரம், தர்மசாஸ்த்ரம், புராணம் இவையெல்லாம்

த்ரயியில் அடங்கியிருக்கிறதென்று எண்ணுகிறார்கள். பசுக்களை மேய்ப்பதாலும், பூமியைப் பயிரிடுவதாலும், வ்யாபாரத்தாலும் ஜீவனஞ்செய்கிறவர்களின் தொழில்களைப்பற்றின சாஸ்த்ரம் வார்த்தாவெனப்படும். இதையறிந்தவன் தன் ராஜ்யத்தில் கலஹம் நேருமென்று பயப்படவேண்டியதில்லை. ப்ரஜைகள் குற்றஞ் செய்தால் அவர்களுக்குத் தண்டனை விதிக்கும் சாஸ்த்ரம் தண்ட நீதி யெனப்படும்—(காமந்தகீய நீதி ஸாரம். 2).

20. சாரர்கள். தன்னுடைய ராஜ்யத்திலாவது இதரராஜ்யங்களிலாவது நடக்கும் விருத்தாந்தங்களையறிவதற்காக அரசனால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தூதர்கள். அவர்கள் பெரும்பாலும் மாறு வேஷம்பூண்டு ஸஞ்சரிப்பார்கள்.

47-14. ப்ரதிபை. முன்யோசனையில்லாமலேயே அந்தந்த ஸமயத்திற்குத் தகுந்தபடி யுக்தியும் மறுமொழியும் தோன்றும் சக்தி.

ஸர்க்கம் 8.

தர்மமாக ராஜ்யத்தை ஆண்டுவந்த தசரதர், பகவான் அவதாரஞ்செய்வதற்கு யோக்யமான புருஷனென்று வர்ணிக்கப்பட்டது. பகவானுடைய அவதாரத்திற்கு ஸாதனமாயிருக்கும் அவருடைய ஆராதனரூபமான அச்வமேதயாகம் இப்பொழுது வர்ணிக்கப்படுகின்றது.

48-4 புத்ரஸம்பத்திற்காக:—அயோத்யைக்கு ஸமீபத்தில் தக்ஷிணகோஸலமென்று ஓர் தேசமுண்டு. அதைக் கோஸலனென்ற ஓர் அரசன் ஆண்டுவந்தான். அவனுக்குக் கௌஸல்யையென்ற ஓர் புத்ரி. அவளை அயோத்யாதிபதியான தசரதருக்கு விவாஹஞ் செய்துகொடுப்பதாய் நிச்சயித்து முஹூர்த்தத்தையேற்படுத்தித் தசரதரையழைத்துவருவதற்காகத் தூதர்களையனுப்பினான். அப்பொழுது தசரதர் ஸரயூநதியில் தன் பந்துக்களுடனும் மந்த்ரிகளுடனும் ஆநந்தமாய் ஜலக்ரீடைசெய்துகொண்டிருந்தார்.

அதே ஸமயத்தில் லங்காதிபதியான ராவணேச்வரன் ப்ரஹ்மதேவனைப்பார்த்து, "ஸ்வாமி! எனக்கு யாரிடத்திலிருந்து மரணம் நேரும்?" என்று கேட்டான். ப்ரஹ்மா, "மஹாவிஷ்ணு அயோத்யாதிபதியான தசரதருக்கும் கோஸலராஜனுடைய

புத்ரியான கௌஸல்யைக்கும் நான்கு குமாரர்களாக அவதரித்து உன்னை வதஞ்செய்வார். இன்றைக்கு ஐந்தாவது தினத்தில் அவ்விருவர்க்கும் விவாஹமுஹூர்த்தம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது" என்றார். அதைக்கேட்டு ராவணன் ராக்ஷஸர்களோடு புஷ்பகவிமானத்திலேறிக்கொண்டு, அயோத்யைக்குச் சென்று, ஓடத்திலிருந்த தசரதரை யுத்தத்தில் ஜயித்துத், தன் காலால் ஓடத்தைப் பொடியாக்கினான். பிறகு கோஸலநகரத்திற்குச் சென்று, கோஸலராஜனை ஜயித்துக் கௌஸல்யையை அபஹரித்துக்கொண்டு ஆகாசமார்க்கமாய் லங்கைக்குச் சென்றான். போகும் வழியில் ஸமுத்ரத்தில் ஒரு பெரிய திமிங்கலத்தைக் கண்டு, "தேவதைகள் எனக்குப் பரமசத்ருக்கள். லங்கையில் நானில்லாதவேளையில் மாறுவேஷம் பூண்டு ஒருவேளை இவளை அபஹரித்துக்கொண்டு போவார்கள். ஆகையால் இவளை இந்தத் திமிங்கலத்தினிடத்தில் வைத்திருப்பது நலமெ"ன்று யோசித்துக், கௌஸல்யையை ஒரு பெட்டியில் வைத்துத் திமிங்கலத்தினிடத்தில் கொடுத்துத், தான் மறுபடியும் கேட்கும்வரையில் ஜாக்ரதையாய்க் காப்பாற்றும்படி ஆக்ஞாபித்து லங்கைக்குச் சென்றான்.

திமிங்கலமும் அந்தப் பெட்டியைத் தன் வாயிலடக்கிக்கொண்டு ஸமுத்ரத்தில் ஸஞ்சரிக்கையில், வேறோர் திமிங்கலம் அதையெதிர்க்க, அதனுடன் யுத்தஞ்செய்வதற்காகத் தன் வாயிலிருந்த பெட்டியை ஒரு த்வீபத்தில் வைத்துவிட்டுச் சண்டைக்கு ஆரம்பித்தது.

இப்படியிருக்கையில் அயோத்யையில் தசரதருடைய பரிவாரங்களெல்லாம் ஸரயூநதியின் ஜலத்தில் மூழ்கிப்போனார்கள். தசரதரும் ஸுமந்த்ரரும் ஓடத்தின் ஒரு பலகையைப் பற்றிக்கொண்டு ஸரயூநதியின்வழியாய் ஸமுத்ரத்தைச் சேர்ந்து, தைவசசெயலாய் அந்த த்வீபத்திற்கே வந்து சேர்ந்தார்கள். அங்கே அந்தப்பெட்டியைக் கண்டு அதைத் திறந்து பார்க்க, அதில் கௌஸல்யையிருக்கக்கண்டு ஆச்சர்யமடைந்தார்கள். ஒருவர்க்கொருவர் தங்களுடைய வரலாற்றைத் தெரிவித்து, அன்று விவாஹமுஹூர்த்தம் நிச்சயிக்கப்பட்ட தினமாகையால் ஸுமந்த்ரரை ஸாக்ஷியாக வைத்துக்கொண்டு தசரதரும் கௌஸல்யையும் காந்தர்வவிவாஹஞ்செய்துகொண்டார்கள். பிறகு அந்தப்பெட்டியில் அம்மூவர்களும் புகுந்து முன்போல் அதை மூடிவிட்டார்கள்.